இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
பாராளுமன்றம்

# 1982 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மை (திருத்தச்) சட்டம்

*[1982, திசெம்பர் மாதம் 30 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

1982, திசெம்பர் 31 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை: ரூபா 3.50 தபாற் செலவு: ரூபா 1.50

## 1982 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மை (திருத்தச்) சட்டம்

[1982, திசெம்பர் மாதம் 30 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஒ. 7/82
1508

**1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தைத் திருத்துவதற்கான ஒரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப்பெயர்.

1. இச்சட்டமானது, 1982 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கச் சட்டத்தின் விரிவுப் பெயரைத் திருத்துதல்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடு செய்யப்படும்) 1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தின் விரிவுப்பெயரானது, "தனித்தனியான கூறுகளாகப்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "கூறுகளாகப்" என்னும் சொல்லை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவானது "தனித்தனியான கூறுகளைக்" என்ற சொற்களுக்குப் பதிலாக "கூறுகளைக்" என்ற சொல்லை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில்—

(அ) அந்த உட்பிரிவின் (i) என்னும் பந்திக்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும் :—

"(i) உரிமம்பெற்ற நில அளவையாளரொருவரால் அல்லது நில அளவையாளர் தலைமையதிபதியால் அல்லது அவரது அதிகாரத்தின்கீழ் தயாரிக்கப்பட்டு வரையப்பட்டிருக்கவேண்டியதான நில அளவை வரைபடமொன்றை அல்லது வரைபடங்களை கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன்—

(அ) உத்தேச கூட்டாட்சியாதனத்தின் வெளிப்புற மேற்பரப்பு எல்லைகளையும் எல்லைக் குறிகளையும், மேற்பரப்பு எல்லைகளைத் தொடர்புறுத்தி அதன்மீது நிறுவப்பட்டுள்ள, ஒவ்வொரு துணைப்பிரிவாக்கப்பட்ட கட்டடத்தின் அமைவிடத்தையும் வரைந்து காட்டுதலும் வேண்டும் ;

(ஆ) கூட்டாட்சியாதனம் பதிவுசெய்யப்பட்டுள்ளதான பிரிவு, தொகுதி, இருமடித்தாள் என்பவற்றையும், அதன் அளப்பனவு செய்யப்பட்ட இடப்பரப்பையும் குறித்துரைத்தலும் வேண்டும்';

(இ) (i) ஒவ்வொரு மாடியினதும் தளங்களையும் உட்கூரைகளையும்; அத்துடன்

(ii) ஒவ்வொரு மாடியினதும் உயரத்தையும்,

காட்டுவதான துணைப் பிரிவாக்கப்பட்ட கட்டடம் ஒவ்வொன்றினதும் செங்குத்தான பிரிவு ஒன்றினையும், உள்ளடக்கியிருத்தலும் வேண்டும்;

(ஈ) கட்டட வரைபடங்களையும் துணைப் பிரிவாக்கம் பற்றிய வரைபடங்களையும் அங்கீகரிப்பதற்கு அப்போதைக்குப் பொறுப்பாக இருப்பதான அதிகார சபையினால் அங்கீகரிக்கப்பட்ட அத்தகைய வரைபடங்களுக்கு இணங்க, தனியான குடிமனை ஒன்றாக அல்லது ஏதேனும் பூரணமாக்கப்பட்ட, துணைப் பிரிவாக்கப்பட்ட கட்டடத்தின் விரிவாக்கமொன்றாக கூட்டாட்சியாதனத்தினுள் நிறுவுவதென உத்தேசிக்கப்பட்ட கட்டடம் ஒவ்வொன்றினதும் அல்லது அவற்றின் பாகங்களினதும், விவரணம் ஒன்றினையும், அதுபோன்ற செங்குத்தான பிரிவு பரிமாணம் என்பவற்றையும் உள்ளடக்கியிருத்தலும் வேண்டும்;

(உ) உட்பிரிவுகள் (1அ), (1ஆ) என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, தாங்கு தளம் எதனையும் காட்டவேண்டிய அவசியம் இல்லாமல், கிடைநிலைப் பரிமாணங்களைக் காட்டும் தளங்கள், சுவர்கள் என்பனவற்றைக் குறிப்பிடுசெய்து, ஒவ்வோர் உத்தேசக் கூறினையும் வரைந்து காட்டுவதுடன் அதன் எல்லைகளை வரைவுசெய்தலும் வேண்டும்;

(ஊ) கட்டடம் ஒவ்வொன்றும் எக்கூறுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளதோ அக்கூறுகளை அடையாளம்காட்டி, அத்தகைய கூறுகளை வரிமதிப்பீட்டிலக்கங்கள், இலக்கங்கள் அல்லது வேறு சின்னங்கள் மூலம் வேறுபடுத்திக்காட்டுதலும் வேண்டும்;

(எ) கூட்டாட்சியாதனத்தின் நில அளவைத் துண்டு எண்ணைத் தொடர்புபடுத்தி ஒவ்வொரு மாடியையும் சுட்டெழுத்தொன்றினால் வேறுபடுத்திக்காட்டுதலும், ஒவ்வொரு மாடியினதும் எண்ணைத் தொடர்புபடுத்தி அந்த மாடியிலுள்ள கூறுகளைக் குறித்துரைத்தலும் வேண்டும்;

(ஏ) ஒவ்வொரு கூறினதும் தள இடப்பரப்பை அண்ணளவாகக் காட்டுதலும் வேண்டும்;

(ஐ) கட்டட வரைபடங்களையும் துணைப்பிரிவாக்கம் பற்றிய வரைபடங்களையும் அங்கீகரிப்பதற்கு அப்போதைக்குப் பொறுப்பாக இருப்பதான அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட அத்தகைய வரைபடங்கள் இருப்பின் அவற்றுக்கு இணங்க, தனியான இருப்பிடக்கூறு ஒன்றாக அல்லது ஏதேனும் பூரணமாக்கப்பட்ட, துணைப்பிரிவாக்கப்பட்ட கட்டடத்தின் அல்லது கட்டடங்களின் விரிவாக்கமொன்றாக கூட்டாட்சியாதனத்தினுள் நிறுவுவதென உத்தேசிக்கப்பட்ட கட்டடம் ஒவ்வொன்றினதும் அல்லது அவற்றின் பாகங்களினது தாங்குதளம் எதனையும் காட்டவேண்டிய அவசியம் இல்லாமல், வெளிப்புற எல்லைகளை வரைந்து காட்டுதலும் கிடைநிலைப் பரிமாணங்களைக் காட்டுதலும் வேண்டும்;

(ஒ) கூட்டாட்சியாதனத்துக்கான பொது அமிசங்களை வரைவுசெய்தலும் வேண்டும்;

(ஓ) கூட்டாட்சியாதன வரைபடத்தில் காட்டப்பட்ட கட்டடமானது கூட்டாட்சியாதனத்தில் வெளிப்புறக் கிடைநிலை எல்லைகளுள் அமைந்துள்ளதென்னும் பயன்பட, அதனைத் தயாரிப்பவரான ஆளினால் செய்யப்பட்ட, புறக்குறிப்பொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்; அத்துடன்

(ஔ) அதிற் காட்டப்பட்ட கூறுகள், கூட்டாட்சியாதனத்திலுள்ள அதேபோன்றவையென்னும் பயன்பட, தகைமை பெற்ற கட்டடக் கலைஞரொருவரின் அல்லது தகைமைபெற்ற சிவில் அல்லது கட்டடவமைப்புப் பொறியியலாளரொருவரின் சான்றிதழொன்று இணைக்கப்படுதலும் வேண்டும்; அத்துடன்" ; அத்துடன்

(ஆ) அவ்வுட்பிரிவின் (ii) என்னும் பந்தியில்—

(i) அப்பந்தியின் (ஐ), (ஒ), (ஓ), (ஔ), (க) அத்துடன் (ங) என்னும் உட்பந்திகளை அப்பந்தியின் (ஓ), (ஔ), (க), (ங), (ச) அத்துடன் (ஞ) என்னும் உட்பந்திகளாக மீள எழுத்திடுவதன்மூலமும்;

(ii) அப்பந்தியின் (ஏ) என்னும் உட்பந்தியை நேரே உடனடுத்துப்பின்னராக, பின்வரும் புதிய உட்பந்திகளை உட்புகுத்துவதன்மூலமும் :—

"(ஐ) கூட்டாட்சியாதனத்தின் துணைக்கூறுகள் குறித்துரைக்கப்பட்ட கூறுகளுக்கு அருகமைந்துள்ளனவா அல்லவா என்பதைப் பொருட்படுத்தாது, அத்துணைக் கூறுகள் எக்கூறுகளுக்குச் சேர்ந்தவையாக ஆக்கப்பட்டுள்ளனவோ அக்கூறுகளைக் குறித்துரைத்து, அத்துணைக்கூறுகள் பற்றிய விவரணமொன்று ;

(ஒ) கூட்டாட்சியாதனத்தின் பொது அமிசங்களிலுள்ள ஒவ்வொரு கூறினதும் சொரியலான பங்குப் பெறுமதி ;" ; அத்துடன்

(iii) அப்பந்தியின் மீள எழுத்திடப்பட்டதான (க) என்னும் உட்பந்தியில், "(ஊ) என்னும் உட்பந்தியிலும்" என்னும் சொல்லமைப்புக்குப் பதிலாக, "(ஔ) என்னும் உட்பந்தியிலும்" என்னும் சொல்லமைப்பை இடுவதன்மூலமும் ;

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப்பின்னராக பின்வரும் புதிய உட்பிரிவுகளை உட்புகுத்துவதன்மூலமும் :—

"(1அ) துணைக்கூறு ஒன்று கட்டடம் ஒன்றினை அல்லது அதன் பாகங்களைக் கொண்டிருப்பதாகவிருந்து, அத்துடன் வெளிப்புறச் சுவர்களையும், தளங்களையும், உட்கூரைகளையும் எல்லைகளாகக் கொண்டிருக்குமிடத்து, அத்தகைய துணைக்கூறின் பரிமாணங்கள், எல்லைகள் என்பன கூட்டாட்சியாதன வரைபடத்தில் (1) ஆம் உட்பிரிவின் (ii) என்னும் பந்தியின் தேவைப்பாடுகளுக்கு இணங்கக் காட்டப்படுதல் வேண்டும்.

(1ஆ) துணைக்கூறு ஒன்று, கட்டடம் ஒன்றினை அல்லது அதன் பாகங்களைக் கொண்டிராதவிடத்து—

(அ) அத்துணைக்கூறின் வெளிப்புற எல்லைகள், கட்டட வரைபடங்களையும் துணைப்பிரிவாக்கம் பற்றிய வரைபடங்களையும் அங்கீகரிப்பதற்கு, அப்போதைக்குப் பொறுப்பாக இருப்பதான அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட அத்தகைய வரைபடங்களிலிருந்து நிச்சயப்படுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்துணைக்கூறு, கூட்டாட்சி ஆதனத்தின் இன்னொரு பாகத்தினால் தரைமட்டத்திற்கு மேலே உள்ள ஏதேனும் நீட்சியின் அல்லது கீழேயுள்ள ஊடுருவலின் அளவுக்குத் தவிர, அதன் செங்குத்தான பரிமாணத்தைப் பொறுத்த வரை வரையறையற்றதாக இருத்தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) கூட்டாட்சி ஆதனமானது (அ) என்னும் பந்தியில் குறிப்பிடப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களில் காட்டப்பட்டவாறான அதேபோன்ற பரிமாணங்களுடன் துணைக்கூறின் விளக்கப்படம் ஒன்றினைக் காட்டுதல் வேண்டும்.

(1இ) கூட்டாட்சியாதன வரைபடம் ஒவ்வொன்றும்—

(அ) முழுத்தானங்களில் ஒவ்வொரு கூறினதும் பங்குப் பெறுமதிகளையும் எல்லாக் கூறுகளினதும் கூட்டுமொத்தப் பங்குப் பெறுமதி உரித்துகளுக்குச் சமமான ஒரு தானத்தையும் காட்டுதல் வேண்டும் என்பதுடன், இடைநிலைக்காலக் கூறு அல்லது கூறுகள் எவற்றினதும் விடயத்தில், அந்த இடைநிலைக்காலக்கூறு அல்லது கூறுகள் தொடர்பில் இடைநிலைக்காலப் பங்குப் பெறுமதியின் தொகையளவு அதேபோன்று அதன்கண் காட்டப்படுதலும் வேண்டும்;

(ஆ) பிரிவு 20ங என்பதற்கு இணங்க, ஆவணங்கள் முகாமைக் கூட்டுத்தாபனத்திற்குச் சேர்ப்பிக்கப்படக்கூடிய தான முகவரி புறக்குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்; அத்துடன்

(இ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு விவரங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்."; அத்துடன்

(3) அப்பிரிவின் முடிவில், பின்வரும் புதிய உட்பிரிவுகளைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(3) கூட்டாட்சியாதனத்தில் வேறு விதமாகக் குறித்துக்காட்டப்பட்டிருந்தாலன்றி, இன்னொரு கூறுடன் அல்லது பொதுவான அமிசங்களுடன் ஏதேனும் கூறுக்குள்ள பொதுவான எல்லையானது, விடயத்துக்கேற்ப, தளத்தின், சுவரின் அல்லது உட்கூரையின் மத்தியாக இருத்தல் வேண்டும்.

(4) கூட்டாட்சியாதன வரைப்படமொன்றாகச் சமர்ப்பிக்கப்பட்ட வரைபடம் எதுவும்—

(அ) கூட்டாட்சி ஆதனத்தின் வெளிப்புற மேற்பரப்பு எல்லைகளைத் தொடர்புறுத்தி கூட்டாட்சியாதன வரைபடத்தில் காட்டப்பட்ட எல்லாக் கட்டடங்களும், எல்லாக் கூறுகளும் கூட்டாட்சி ஆதனத்தினுள் உள்ளன எனவும், அவை, கட்டட வரைபடங்களையும் துணைப்பிரிவாக்கம் பற்றிய வரைபடங்களையும் அங்கீகரிப்பதற்கு அப்போதைக்குப் பொறுப்பாக இருப்பதான அதிகார சபையினால் வழங்கப்பட்ட கட்டட வரைபடங்கள் எவையேனும் இருப்பின் அவற்றுக்கும் துணைப்பிரிவாக்கம் பற்றிய வரைபடங்களுக்கும் இசைந்தொழுகுவனவாக உள்ளன எனவும் கூறுவதான உரிமம்பெற்ற நிலஅளவையாளர் ஒருவரின் சான்றிதழொன்று கொண்டு அதன்கண் புறக்குறிப்பிடப்பட்டிருந்தாலன்றி;

(ஆ) அந்த வரைபடமானது, கூட்டாட்சியாதனத் துணைப்பிரிவாக்கம் பற்றிய வரைப்படங்களை அங்கீகரிப்

பதற்கு அப்போதைக்குப் பொறுப்பாக இருப்பதான அதிகாரசபையினுல் அங்கீகரிக்கப்பட்டதான இயை பான கூட்டாட்சியாதனத் துணைப்பிரிவாக்கம் பற்றிய வரைபடத்தின் பிரதி ஒன்றுடன் இணைத்திருந்தா லன்றி ; அத்துடன்

(இ) பிரிவு 20அ என்பதன் ஏற்பாடுகளுக்கு இசைந்தொழுகு தல் வகையாக ஒவ்வோர் உத்தேசக் கூறினதும் பங்குப் பெறுமதி வரைபடத்தில் பதியப்பட்டிருந்தாலன்றி,

பதிவு செய்யப்படுதலாகாது.”.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 7அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

5. பின்வரும் புதிய பிரிவானது 7 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்னராக இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், அது முதன்மைச்சட்டவாக்கத்தின் 7அ என்னும் பிரிவாகப் பயனுறுவதாதலும் வேண்டும் :—

‘கூட்டாட்சியாதன இடாப்பு.

7அ. (1) கூட்டாட்சியாதன வரைபடமானது பதிவாளரால் ஒப்பிடப்பட்டு இலச்சினையிடப்பட்டு கூட்டாட்சியாதன வரைபட இடாப்பினது தொடரெண் கொண்டு குறிப்பிடப்பட்டிருக்கும்போது இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் பதிவுசெய்யப்பட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) பதிவாளரானவர், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, “கூட்டாட்சியாதன இடாப்பு” என அழைக்கப்படும் ஒரு தொடரான பதிவேடுகளைத் தயாரித்துப் பேணிவருதல் வேண்டும் என்பதுடன், கூட்டாட்சியாதன வரைபடத்தில் காட்டப்பட்ட ஒவ்வொரு கூறினதும் சொந்தக்காரருக்கு கூட்டாட்சியாதன வரைபடத்தின் சான்றுபடுத்தப்பட்ட உண்மைப் பிரதியொன்றை வழங்குதலும் வேண்டும்.

(3) கூட்டாட்சியாதன வரைபடமொன்று பதிவுசெய்யப்படுவதன்மீது கூட்டாட்சியாதனத்திலான கூறொன்றின் சொந்தக்காரரானவர், கூட்டாட்சியாதன இடாப்பிலும் கூட்டாட்சியாதன வரைபடத்திலும் பதிவுசெய்யப்பட்ட அல்லது குறிக்கப்பட்ட பாரபந்தங்கள் எவையேனும் இருப்பின் அவற்றுக்கு அமைவாக, அவரது கூறுக்கும் பொது அமிசங்களில் அவருக்குள்ள பங்குக்கும் சொந்தக்காரராகக் கருதப்படுதல் வேண்டும்’.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்வதன்மூலமும் அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் :—

“(1) கூட்டாட்சியாதன வரைபடம் பதிவுசெய்யப்படுவதன் மீது பதிவாளரானவர், காணி இடாப்பில் உள்ள கூட்டாட்சியாதனத்துக்கான தொகுதியிலும் இருமடித்தாளிலும், கூட்டாட்சியாதனத்தின் துணை இடாப்பொன்று உருவாக்கப்பட்டுள்ளதெனும் பயன்பட்ட நிருபக்குறிப்பொன்றைப் பதிவீடு செய்தல் வேண்டுமென்பதுடன், கூட்டாட்சியாதனத்தில்

குறித்துக்காட்டப்பட்ட ஒவ்வொரு கட்டடமும் கூறுகளாகப் பிரிக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுதலும் அதன்கண் அடையாளம் காட்டப்படுதலும் வேண்டும்; அத்துடன், அதன்மேல் பொது அமிசங்களானவை கூறுகள் எல்லாவற்றினதும் சொந்தக்காரர்களால், அவரவர்க்குரிய பங்குக் கூறுகளுக்கும் அவரவரது கூறுகள் அவரவரால் வைத்திருக்கப்படும் அதே காலப்பகுதிக்கும் பயன்பாட்டுக் காலத்திற்கும், விகிதாசாரமான முறையில் பொதுவான வாடகைக் குடியிருப்பாளர்களெனும் வகையில் வைத்திருக்கப்படுதல் வேண்டும்."; அத்துடன்

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்னராக பின்வரும் புதிய உட்பிரிவுகளை உட்புகுத்துவதன்மூலமும் :—

"(1அ) பதிவாளரானவர், கூட்டாட்சியாதன வரைபடம் பதிவுசெய்யப்படுவதன்மீது அதன்கண், கூறொன்றின் சொந்தக்காரர் பொது அமிசங்களில் கொண்டிருக்கும் பங்கினை சான்றுபடுத்துதல் வேண்டும்.

(1ஆ) பொது அமிசங்களில் கூறொன்றின் சொந்தக்காரர் ஒவ்வொருவரும் கொண்டுள்ள பங்குப் பெறுமதியானது, அத்தகைய கூறு, விடயத்துக்கேற்ப, வாணிப அல்லது வதிவிட அல்லது வேறுவகையான பயன்பாட்டிற்குரியதா என்பதைப் பொறுத்து அளிக்கப்படுதல் வேண்டும்.".

7. பின்வரும் புதிய பிரிவானது, 11 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்னராக இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், முதன்மைச் சட்டவாக்கத்தின் 11அ என்னும் பிரிவாகப் பயனுறுவதாதலும் வேண்டும் :— (முதன்மைச் சட்டவாக்கத்தில் 11அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.)

"துணைக் கூறுகள்.

11அ. (1) துணைக்கூறு எதுவும், அல்லது அதன்கண் ஆன பங்கு அல்லது சொத்துரிமை அல்லது அக்கறை எதுவும், பதிவுசெய்யப்பட்ட இயைபான கூட்டாட்சியாதன வரைபடத்தில் காட்டப்பட்டவாறு அத்தகைய துணைக்கூறானது எக்கூறுக்கு சேர்ந்ததாக்கப்பட்டுள்ளதோ அக்கூறுக்குப் புறம்பான தன்மையில் கையாளப்படுதலாகாது.

(2) துணைக்கூறு எதனையும் அல்லது அதன்கண் ஆன பங்கு அல்லது சொத்துரிமை அல்லது அக்கறை எதனையும் பதிவுசெய்யப்பட்ட இயைபான கூட்டாட்சியாதன வரைபடத்தில் அத்தகைய துணைக் கூறானது எக்கூறுக்குச் சேர்ந்ததாகக் காட்டப்பட்டுள்ளதோ அக்கூறுக்குப் புறம்பாகவும் அதற்கு சேர்ந்ததாகச் செய்திராதும் கையாளும் ஆள் எவரும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(3) ஒராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரண்படுவதாகச் செய்யப்படும் உறுதியளிப்பு எதுவும், இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்படுதலாகாது; அத்துடன், அதுபற்றிய பதிவு எதுவும், வெற்றும் வறிதும் ஆதல் வேண்டும் என்பதுடன், துணைக்கூறிலான ஏதேனும் சொத்துரிமையை அல்லது அக்கறையை உரிமை மாற்றுவதாதலுமாகாது.

(4) அத்தகைய உறுதியளிப்பு எதுவும் பதிவுசெய்யப்பட்டுள்ளவிடத்து, பதிவாளர் அதனைக் கண்டுபிடிப்பதன் மேல், அப்பதிவினை இல்லாதாக்குதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய இல்லாதாக்குகையினால் பாதிக்கப்பட்டவரான ஆள் எவரும் நட்டஈடு எதற்கும் உரித்துடையராதலுமாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துதல்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவானது அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) அவ்வுட்பிரிவின் (ஊ) என்னும் பந்திக்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் :—

"(ஊ) பிரிக்கப்படாத அல்லது ஒன்றுசேர்க்கப்பட்ட கூறுக்குச் சேர்ந்ததான பொது அமிசங்களிலான ஒவ்வொரு கூறினதும் சொரியலான பங்குப் பெறுமதி ;" ;

(ஆ) அவ்வுட்பிரிவின் (எ) என்னும் பந்தியில், "குறிப்பிட்டு உள்ளூரதிகார சபையிடமிருந்து" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "குறிப்பிட்டு, மீளப்பிரித்தல் அல்லது ஒன்றுசேர்த்தலுக்கான வரைபடங்களை அங்கீகரிப்பதற்கு அப்போதைக்குப் பொறுப்பாக இருப்பதான அதிகாரசபையிடமிருந்து" என்னும் சொற்களை இடுவதன் மூலம் ; அத்துடன்

(இ) அவ்வுட்பிரிவின் (ஏ) என்னும் பந்தியில் "காட்டுகின்ற (உரிமம்பெற்ற நில அளவையாளரொருவரினால் செய்யப்பட்ட)" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "காட்டுகின்ற, (உரிமம்பெற்ற நில அளவையாளரொருவரால் அல்லது நில அளவையாளர் தலைமையதிபதியால் அல்லது அவரது அதிகாரத்தின்கீழ் செய்யப்பட்ட)" என்னும் சொற்களை இடுவதன் மூலம்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவானது இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"வசதியுரிமைகள்.

13. (1) கூறு ஒவ்வொன்றும் தொடர்பில்—

(அ) கூறொன்றின் சொந்தக்காரரது பேரிலும் அக்கூறுக்குச் சேர்ந்ததாகவும், பொது அமிசங்களிலிருந்தும், ஆதாரம் தாவல்ல ஒவ்வொரு கூறிலிருந்தும் வழிபெறத்தகு கீழ் நிலையான, பக்க, ஆதாரத்துக்கான வசதியுரிமையொன்றும் ; அத்துடன்

(ஆ) ஒவ்வொரு கூறினதும் சொந்தக்காரருக்கு எதிர்மறையாகவும், அவ்வசதியுரிமைக்கு கூறு அமைவானதாகவும் இருக்கவேண்டியதான, பொது அமிசங்களுக்கும், ஆதாரத்தை துய்க்கவல்ல மற்றைய ஒவ்வொரு கூறுக்கும் கீழ்நிலையான, அத்துடன் பக்கவழி, ஆதாரத்துக்கான வசதியுரிமையொன்றும்,

இருப்பதாக உட்கிடையாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவினுல் உருவாக்கப்பட்ட ஆதாரத்துக்கான வசதியுரிமையானது, வசதியுரிமைதரும் குடிமனையிற் பிரவேசித்து ஏதேனும் ஆதாரத்தை மீள இடுதற்கு புதுப்பித்தற்கு அல்லது மீளமைத்தற்கு வசதியுரிமைபெறும் குடிமனையின் சொந்தக்காரரை உரித்துடையதாக்குதல் வேண்டும்.

(3) ஒவ்வொரு கூறினதும் சொந்தக்காரரானவர், துணைப்பிரிவாக்கப்பட்ட கட்டடத்தின் பாதுகாப்பளிக்கவல்லனவான வேறு எல்லாப் பாகங்களிலிருந்தும் அவரது கூறு பாதுகாப்பு பெறுவதற்கு உரித்துடையராதல் வேண்டும்.

(4) மூன்றும் உட்பிரிவினுல் உருவாக்கப்பட்ட உரிமையானது துணைப் பிரிவாக்கப்பட்ட கட்டடத்தின் மேற்சொல்லப்பட்ட பாகங்கள் அதற்கு அமைவாகவிருப்பனவான ஒரு வசதியுரிமையாதல் வேண்டும்.

(5) இப்பிரிவினுல் உருவாக்கப்பட்ட பாதுகாப்பு வசதியுரிமையானது, வசதியுரிமைதரும் குடிமனையிற் பிரவேசித்து ஏதேனும் பாதுகாப்பினை மீள இடுதற்கு, புதுப்பித்தற்கு அல்லது மீளமைத்தற்கு வசதியுரிமை பெறும் குடிமனையின் சொந்தக்காரரை உரித்துடையதாக்குதல் வேண்டும்.

(6) ஒவ்வொரு கூறும் தொடர்பில்—

(அ) கூறொன்றின் சொந்தக்காரரது பேரிலும் அக் கூறுக்குச் சேர்ந்ததாகவும், எவையேனும் கழிநீர் வடிகால்கள், குழாய்கள், கம்பிகள், கம்பிவடங்கள் அல்லது கம்பிவடக் குழாய்கள் என்பன அக்கூறின் வசதிதுய்ப்பு தொடர்பில் எந்த அளவுக்குப் பயன்படுத்தப்பட வல்லனவோ அந்த அளவுக்கு அந்தக் குழாய்கள், கம்பிகள், கம்பிவடங்கள் அல்லது கம்பிவடக் குழாய்கள் ஊடாக அல்லது அவற்றின் மூலமாக, நீர், கழிநீர், வடிகாற்பொருள், வாயு, மின்சாரம், குப்பை கூளங்கள், செயற்கைவழி வெப்பமூட்டப்பட்ட அல்லது குளிரூட்டப்பட்ட காற்று அத்துடன், (தொலைபேசி, வானொலி, தொலைக்காட்சிச் சேவைகள் உட்பட்ட) வேறு சேவைகளின் செல்கை அல்லது ஏற்பாடு செய்தளிப்பு ஆகியவற்றுக்கான வசதியுரிமை; அத்துடன்

(ஆ) கூறொன்றின் சொந்தக்காரருக்கு எதிர்மறையாகவும், அதற்குக் கூறு அமைந்திருப்பதாகவும் உள்ளதான, பொது அமிசங்களைச் சேர்ந்தனவாகவும் அத்துடன், அத்தகைய வசதியுரிமைகளை அனுபவிக்கவல்ல வேறு ஒவ்வொரு கூறுக்கும் சேர்ந்தனவாகவும், எவையேனும் கழிநீர் வடிகால்கள், குழாய்கள், கம்பி

கள், கம்பிவடங்கள் அல்லது கம்பிவடக் குழாய்கள் என்பவற்றின் ஊடாக அல்லது அவற்றின் மூலமாக நீர், கழிநீர், வடிகாற் பொருள், வாயு, மின்சாரம், குப்பை கூளங் கள், செயற்கைவழி, வெப்பமூட்டப்பட்ட அல்லது குளிரூட்டப்பட்ட காற்று அத்துடன் (தொலைபேசி, வானொலி அத்துடன் தொலைக் காட்சிச் சேவைகள் உட்பட்ட) வேறு சேவை களின் செல்கை அல்லது ஏற்பாடு செய் தளிப்பு என்பவற்றுக்கான வசதியுரிமை,

என்பன இருப்பனவாக உட்கிடையாகக் கொள் ளப்படுதல் வேண்டும்.

(7) ஒவ்வொரு கூறும் பொது அமிசங்களும் தொடர் பாக, வசதியுரிமைபெறும் குடிமனையின் சொந்தக்காரர் பேரிலும் வசதியுரிமைதரும் குடிமனையின் சொந்தக் காரருக்கு எதிர்மறையாகவும்—

(அ) இயைபான கூட்டாட்சியாதன வரைபடம் பதிவுசெய்யப்பட்ட தேதியில் உளதாயிருந் தும் துய்க்கப்பட்டதுமான எவையேனும் சாளரங்கள், கதவுகள் அல்லது வேறு இடை வெளிகளுக்கான இடையீடற்ற ஒளி அணுக்கம் அத்துடன், பயன்பாடு என்பனவற்றுக்கான வசதியுரிமையொன்று ; அத்துடன்

(ஆ) இயைபான கூட்டாட்சியாதன வரைபடம் பதிவுசெய்யப்பட்ட தேதியில் உளதாயிருந் தவையான மேற்தொங்குகூரைகளையும் பிற நீட்சிகளையும் பேணுதற்கும் பயன்படுத்து தற்குமான உரிமை,

என்பன இருப்பனவாக உட்கிடையாகக் கொள்ளப் படுதல் வேண்டும்.

(8) பொது அமிசங்களுக்குச் சேர்ந்ததாகவும் தொடர்புபட்ட கூறு எதற்கும் வசதியுரிமையளிப்ப தாகவும்—

(அ) ஏதேனும் கூறிலான அமைப்பெதனூடாகவும் ஏதேனும் சேவையை ஏற்பாடு செய்வதற்கான ஒரு வசதியுரிமையும், அத்துடன்

(ஆ) ஆதாரமளிக்கவல்லதான ஏதேனும் கூறினு லான ஆதாரத்துக்காய வசதியுரிமை ஒன்றும்,

இருப்பனவாக உட்கிடையாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(9) இச்சட்டத்தினுல் உட்கிடையாகக் கொள்ளப்படுவனவான அல்லது உருவாக்கப்படுவனவான வசதியுரிமைகள், கூட்டாட்சியாதன இடாப்பிலுள்ள இருமடித் தாள்களில் நிருபக்குறிப்பு அல்லது அறிவிப்பு எதுவும் இடப்படுதலின்றி பயனுறுவனவாதலும், வலுவுக்கிடப் படுவனவாதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துதல்.

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவானது, "சபையின் அனுமதியுடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "முகாமைக் கூட்டுத் தாபனத்தின் அனுமதியுடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும், "உரிமையுட்பட வசதியுரிமைகளைப் பயனுடையனவாக்குவதற்கு நியாயமான அளவில் அவசியமான அத்தகைய எல்லாத் துணையுரிமைகளும் கட்டுப்பாடுகளும் இச் சட்டத்தினுல் அளிக்கப்பட்ட வசதியுரிமைகளுடன் சேர்ந்தமைந்தனவாதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "உரிமையுட்பட, இச் சட்டத்தினுல் அல்லது இச்சட்டத்தின்கீழ் வசதியுரிமைகள் உருவாக்கப்படும்போதெல்லாம் அல்லது உட்கிடையாகக் கொள்ளப்படும்போதெல்லாம் வசதியுரிமைகளைப் பயனுடைத்தானவையாக்குதற்கு நியாயமாக அவசியமான எல்லாத் துணையுரிமைகளும் கடப்பாடுகளும் உட்கிடையாகக் கொள்ளப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 முதல் 20 வரையிலான பிரிவுகளை மாற்றீடுசெய்தல்.

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 முதல் 20 வரையிலான பிரிவுகள் இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அவற்றுக்குப் பதிலாக பின்வரும் பிரிவுகள் இடப்படுகின்றன :—

'வசதியுரிமைகள் முதலியனவற்றின் வழங்குகைகளை எழுதி நிறைவேற்றுதல் முதலியன.

15. (1) எல்லாக் கூறுகளினதும் சொந்தக்காரர்கள் முகாமைக் கூட்டுத்தாபனத்தால் கூட்டப்பட்டதான கூட்டமொன்றிலான ஏகமனதான தீர்மானம் மூலம்—

(அ) கூட்டாட்சியாதனத்தின்மீது சுமையாகவமைவதான வசதியுரிமை ஒன்றின் வழங்குகையை அல்லது மட்டுப்படுத்தல் வரையுடம்பாடொன்றை தம் சார்பில் எழுதிநிறைவேற்றுமாறு ; அல்லது

(ஆ) கூட்டாட்சியாதனத்துக்கு நலனளிப்பதான வசதியுரிமை ஒன்றின் வழங்குகையை அல்லது மட்டுப்படுத்தல் வரையுடம்பாடொன்றைத் தம்சார்பில் ஏற்றுக்கொள்ளுமாறு,

கூட்டுத்தாபனத்தைப் பணிக்கலாம்.

(2) தீர்மானம் உரியமுறையில் நிறைவேற்றப்பட்டது எனவும் உத்தேசக் கையுதிர்ப்பில் அடக்கப்பட்டுள்ளதான கூட்டாட்சி ஆதனம் தொடர்பில் கூட்டாட்சியாதனத்தில் பதிவுசெய்யப்பட்ட அக்கறைகளைக் கொண்டிருப்போரான எல்லா ஆட்களும் அந்த அக்கறைகளை உருவாக்கும் விதம்பற்றி எழுத்தில் சம்மதமளித்துள்ளனர் எனவும் முகாமைக் கூட்டுத்தாபனமானது திருப்தியுறின் அது தோதான சாதனத்தை எழுதி நிறைவேற்றுதல் வேண்டும் என்பதுடன்,

அந்தச் சாதனமானது, கூட்டாட்சியாதனத்தில் அக்கறையொன்றைக் கொண்டுள்ளவரான எவரேனும் ஆளினால் ஆன எழுதிநிறைவேற்றுகை எதுவும் இன்றி செல்லுபடியுடையதாதலும், பயனுறுவதாதலும் வேண்டும்; அத்துடன் அச்சாதனத்தின்கீழ் முகாமைக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படற்பாலனவான பணங்களுக்கான முகாமைக் கூட்டுத்தாபனத்தின் பற்றுச்சீட்டானது போதிய பொறுப்பு விடுவிப்பாதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு பெறப்பட்டவையென வெளிப்படுத்தப்பட்டுள்ளனவான பணங்களின் பிரயோகத்தைக் கவனிப்பதற்கான அல்லது அப்பணங்களின் இழப்பெதற்குமான அல்லது பிறழ் பிரயோகத்துக்கான பொறுப்பிலிருந்து, அச்சாதனத்தின்கீழ் நன்மைபெறும் ஆளைப் பொறுப்புவிலக்குதலும் வேண்டும்.

(3) வசதியுரிமையை அல்லது மட்டுப்படுத்தல் வரையுடம்பாட்டை உருவாக்குவதான, பதிவுக்கெனச் சமர்ப்பிக்கப்பட்ட சாதனம் ஒவ்வொன்றின்மீதும் அல்லது அதனுடன், தீர்மானம் உரிய முறையில் நிறைவேற்றப்பட்டது எனவும், அவசியமான எல்லோரது சம்மதங்களும் கொடுக்கப்பட்டன எனவும் கூறுவதான முகாமைக் கூட்டுத்தாபனத்தின் இலச்சினையின் கீழான சான்றிதழொன்று புறக்குறிப்பீடு செய்யப்படுதல் வேண்டும் அல்லது இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்; அத்துடன், கொள்வனவுகாரரினதும் பதிவாளரினதும் பேரிலான அச்சான்றிதழானது அதன்கண் கூறப்பட்டுள்ள நிகழ்வுகளுக்கான முடிவான சான்றாதலும் வேண்டும்.

(4) பதிவாளரானவர், வசதியுரிமையை அல்லது மட்டுப்படுத்தல் வரையுடம்பாட்டை உருவாக்குவதான சாதனத்தை, பதிவு செய்யப்பட்ட கூட்டாட்சியாதன வரைபடத்தில் அதனைக் குறிப்பதன்மூலம், பதிவுசெய்தல் வேண்டும்.

**பொதுஅமிசங்களின் ஒரு பாகத்தைக் கைமாற்றஞ் செய்தல்.**

16. (1) எல்லாக் கூறுகளினதும் சொந்தக்காரர்கள், முகாமைக் கூட்டுத்தாபனத்தால் கூட்டப்பட்ட கூட்டமொன்றிலான விசேட தீர்மானமொன்றின் மூலம் பொது அமிசங்களின் பாகமொன்றைக் கைமாற்றஞ் செய்யுமாறு முகாமைக் கூட்டுத்தாபனத்தைப் பணிக்கலாம்.

(2) தீர்மானம் உரிய முறையில் நிறைவேற்றப்பட்டது எனவும், கூட்டாட்சியாதனத்தில் பதிவுசெய்யப்பட்ட அக்கறைகளைக் கொண்டிருப்போரான (எல்லாக் கூறுகளினதும் சொந்தக்காரர்களல்லாத) எல்லா ஆட்களும் உத்தேசக் கைமாற்றத்தில் அடங்கியிருப்பதான கூட்டாட்சியாதனம் தொடர்பான அந்த அக்கறைகளை விடுவிப்பதற்கு எழுத்தில் சம்மதமளித்துள்ளனர் எனவும், அத்துடன் ஏதேனும் காணியைத் துணைப்பிரிவாக்குதற்கான அல்லது ஒன்றுசேர்த்தற்கான வரைபடங்களை அங்கீகரிப்பதற்கு அப்போதைக்கு பொறுப்பாக இருப்ப

தான அதிகாரசபையும்.பதிவாளரும் அதன்கண் அடங்கியுள்ள காணியின் துணைப்பிரிவாக்கத்தையும் ஒன்று சேர்த்தலேயும் உத்தேசக் கைமாற்றம் பாதிக்கும் அந்த அளவுக்கு எழுத்தில் சம்மதமளித்துள்ளனர் எனவும் முகாமைக் கூட்டுத்தாபனமானது திருப்தியுறின் அது தோதான சாதனத்தை எழுதிநிறைவேற்றுதல் வேண்டும்; அத்தகைய சாதனம் அத்தகைய பொது அமிசங்களில் அக்கறையொன்றைக் கொண்டுள்ளவரான எவரேனும் ஆளினால் ஆன எழுதிநிறைவேற்றுகை எதுவும் இன்றி செல்லுபடியுடையதாதலும் பயனுறுவதாதலும் வேண்டும்; அத்துடன், அச்சாதனத்தின்கீழ் முகாமைக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தற்படற்பாலனவான பணங்களுக்கான முகாமைக் கூட்டுத்தாபனத்தின் பற்றுச்சீட்டானது போதிய பொறுப்புவிடுவிப்பாதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு பெறப்பட்டவையென வெளிப்படுத்தப்பட்டுள்ளவான பணங்களின் பிரயோகத்தைக் கவனிப்பதற்கான அல்லது அப்பணங்களின் இழப்பெதற்குமான அல்லது பிறழ் பிரயோகத்துக்கான பொறுப்பிலிருந்து கொள்வனவுகாரரைப் பொறுப்பு விலக்குதலும் வேண்டும்.

(3) பதிவுக்கென சமர்ப்பிக்கப்பட்ட அத்தகைய கைமாற்றம் பற்றிய சாதனம் ஒவ்வொன்றின் மீதும் அல்லது அதனுடன் தீர்மானம் உரியமுறையில் நிறைவேற்றப்பட்டது எனவும், அவசியமான எல்லோரது சம்மதங்களும் கொடுக்கப்பட்டன எனவும் கூறுவதான முகாமைக் கூட்டுத்தாபனத்தின் இலச்சினையின்கீழான சான்றிதழொன்று புறக்குறிப்பீடு செய்யப்படுதல் வேண்டும் அல்லது இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்; அத்துடன், கொள்வனவுக்காரரினதும் பதிவாளரினதும் பேரிலான அச்சான்றிதழானது அதன்கண் கூறப்பட்டுள்ள நிகழ்வுகளுக்கான முடிவான சான்றாதலும் வேண்டும்.

(4) கைமாற்றமானது பதிவாளரால் பதிவு செய்யப்படுவதன்மீது பொது அமிசங்களின் கைமாற்றஞ் செய்யப்பட்ட பாகமானது இச்சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்டு அல்லது உட்கிடையாகக் கொள்ளப்பட்டு உளதாயிருப்பவையான அத்தகைய வசதியுரிமைகளிலிருந்து விடுபட்டவையாதல் வேண்டும் என்பதுடன், பதிவாளரானவர்—

(அ) கூட்டாட்சியாதனத்தை உள்ளடக்குவதான காணி இடாப்பின் இருமடித்தாளில் கைமாற்றம் பற்றிய திருபக்குறிப்பு ஒன்றினைப் பதிவீடு செய்தலும் வேண்டும்; அத்துடன்

(ஆ) பொது அமிசங்களின் கைமாற்றம் செய்யப்பட்டதான அந்தப் பாகத்தைக் கூட்டாட்சியாதன வரைபடத்தில் காட்டுவதற்குப் பொருந்தமானதெனப் பதிவாளர் எண்ணும் அத்தகைய முறையில் அதனைத் திருத்துதலும் வேண்டும்.

காணிகளையும் கூறுகளையும் கைமாற்றஞ் செய்தல்.

17. (1) எல்லாக் கூறுகளினதும் சொந்தக்காரர்கள் முகாமைக் கூட்டுத்தாபனத்தால் கூட்டப்பட்டதான கூட்டமொன்றில் ஆன விசேட தீர்மானமொன்றினால்—

(அ) ஏதேனும் காணியினது அல்லது அதன் பாகத்தினது கைமாற்றமொன்றை, அத்தகைய காணி அல்லது அதன் பாகமானது கூறுகளின் எல்லாச் சொந்தக்காரர்களினதும் பேரிலான பொது அமிசங்களின் பாகமொன்றாக அமைந்திருக்கும்வாறாக, நியதிச் சட்டத்தால் உருவாக்கப்பட்ட பாரபந்தங்களும் நிலவுவனவான வசதியுரிமைகளும் தவிர்ந்த எவையேனும் ஏனைய பாரபந்தங்களிலிருந்து விடுபட்டிருப்பதாக ஏற்றுக்கொள்ளுமாறு; அல்லது

(ஆ) ஏதேனும் கூறுக்குச் சேர்ந்ததான பொது அமிசங்களிலான சொரியலான பங்கு உட்படுவதாக ஏதேனும் கூறின் கைமாற்றமொன்றை, அத்தகைய கூறானது பதிவுசெய்யப்பட்ட அதே கூட்டாட்சியாதன வரைபடத்தில் காட்டப்பட்டனவான ஏனைய கூறுகளின் சொந்தக்காரர்களினதும் பேரிலான பொது அமிசங்களின் பாகமொன்றாக அமைந்திருக்கும்வாறாக, நியதிச்சட்டத்தால் உருவாக்கப்பட்ட பாரபந்தங்களும், நிலவுவனவான வசதியுரிமைகளும் தவிர்ந்த எவையேனும் பாரபந்தங்களிலிருந்து விடுபட்டிருப்பதாக ஏற்றுக்கொள்ளுமாறு,

முகாமைக் கூட்டுத்தாபனத்தைப் பணிக்கலாம்.

(2) பதிவுசெய்வதற்கெனச் சமர்ப்பிக்கப்பட்ட கைமாற்றமானது, விடயத்துக்கேற்ப, கைமாற்றஞ்செய்யப்பட்ட அத்தகைய காணி அல்லது அதன்பாகம் அல்லது கூறு, பொது அமிசங்களின் பாகமொன்றாக உள்ளடக்கப்படுதல் வேண்டும் எனப் பதிவாளரைக் கோருவதான வேண்டுகோள் ஒன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) அத்தகைய கைமாற்றமானது பதிவுசெய்யப்படுவதன்மீது பதிவாளரானவர்—

(அ) காணி இடாப்பின் இருமடித்தாளின்மீதும், கூட்டாட்சியாதனத்தை உள்ளடக்குவதான பதிவுசெய்யப்பட்ட கூட்டாட்சியாதன வரைபடத்தின் மீதும் கைமாற்றம் பற்றிய நிருபக் குறிப்பொன்றைப் பதிதல் வேண்டும்;

(ஆ) கைமாற்றஞ்செய்யப்பட்ட காணியை அல்லது அதன் பாகத்தை அல்லது கைமாற்றஞ் செய்யப்பட்ட கூறை, பொது அமிசங்களின் பாகமொன்றாகவமைவதாக கூட்டாட்சியாதன வரைபடத்தில் காட்டுவதற்கென பதிவாளர்

பொருத்தமானதென எண்ணக்கூடிய அத்தகைய முறையில் அதனைத் திருத்துதல் வேண்டுமென்பதுடன், கூறனது கைமாற்றஞ் செய்யப்படும் விடயத்தில், பதிவுசெய்யப்பட்ட கூட்டாட்சியாதன வரைபடத்தில் காட்டப்பட்ட அந்தக்கூறின் பங்குப் பெறுமதியை நீக்கஞ்செய்து, பதிவுசெய்யப்பட்ட கூட்டாட்சியாதன வரைபடத்தில் காட்டப்பட்ட கூட்டு மொத்தப் பங்குரித்துக்குச் சமனன பங்குப் பெறுமதியின் மொத்த எண்ணிக்கையை, அத்தகைய கூட்டுமொத்த எண்ணிக்கையைத் திருத்துவதன் மூலம், குறைத்தலும் வேண்டும் ; அத்துடன்

(இ) அத்தகைய திருத்தம் செய்யப்படுவதன்மீது, கூட்டுமொத்தப் பங்குரித்தையும் கூறென்றின் ஒவ்வொரு சொந்தக்காரரது விளைவாந்தன்மையதான கூட்டுமொத்தப் பங்குரித்தையும் முகாமைக் கூட்டுத்தாபனத்துக்கு அறிவித்தலும் வேண்டும்.

(4) பதிவுசெய்யப்பட்ட கைமாற்றமானது பின்வரும் பயனைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) மூன்றும் உட்பிரிவைப் பின்பற்றித் திருத்தப்பட்ட கூட்டாட்சியாதன வரைபடத்தில் காட்டப்பட்ட, முறையே அவரவர் பங்குப் பெறுமதிக்கு விகிதாசாரமான முறையில் பொதுவான வாடகைக் குடியிருப்பாளர்கள் என்ற வகையிலும், கைமாற்றம் பதிவு செய்யப்படுவதற்கு நேரடி உடன் முன்னராக எல்லாக் கூறுகளினதும் சொந்தக்காரர்களும் கொண்டிருந்த காலப்பகுதிக்கும் பயன்பாட்டுக் காலத்துக்கும், அதே வரையுடம்பாடுகள், நிபந்தனைகள், பாரபந்தங்கள் என்பனவற்றுக்கு அமைவாகவும், எல்லாக் கூறுகளினதும் சொந்தக்காரர்கள் (உரித்து மாற்றம் செய்யப்பட்ட காணி அல்லது கூறு உட்பட) பொது அமிசங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் ; அத்துடன் ஏதேனும் கூறு, அப்போதைக்கு, பதிவுசெய்யப்பட்ட ஈடு, தாக்கீடு, குத்தகை, அல்லது கீழ்க் குத்தகை அல்லது வேறு எவையேனும் பாரபந்தங்களுக்கு அமைவாக இருக்குமிடத்து, சொல்லப்பட்ட கூறினது சொந்தக்காரர் கொண்டிருக்கும் மேலதிகப் பொது அமிசங்களாக அமைகின்றதான, கைமாற்றஞ் செய்யப்பட்ட காணியிலான, அல்லது கைமாற்றஞ்செய்யப்பட்ட கூறிலான, சொரியலான பங்கானது மேலும் ஏதேனும் உறுதியளிப்பின்றி, அதே ஈடு, தாக்கீடு, குத்தகை அல்லது கீழ்க் குத்

தகை அல்லது வேறெவையேனும் பாரபந்தங்களுக்கு எல்லா வகையிலும் அமைவானதாதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) விடயத்துக்கேற்றவாறு, கைமாற்றஞ்செய்யப்பட்ட காணி அல்லது அதன் பாகம், அல்லது கைமாற்றஞ் செய்யப்பட்ட கூறு, பொது அமிசங்களின் பாகமாக அமைதல் வேண்டும் என்பதுடன், பொது அமிசங்களுக்கு ஏற்புடையனவான இச்சட்டத்தின் ஏற்பாடுகள், இப்பிரிவினுல் வேறுபடுத்தப்பட்டுள்ளவாறு, அத்தகைய கைமாற்றஞ்செய்யப்பட்ட காணிக்கு அல்லது கூறுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

பொது அமிசங்கள் முதலியவற்றை ஒன்று சேர்த்தல்.

18. (1) வெவ்வேறுன கூட்டாட்சியாதன வரைபடங்கள் பதிவாளரால் பதிவு செய்யப்படுவதன்மீது இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட முகாமைக் கூட்டுத்தாபனங்கள் தாபிக்கப்பட்டிருக்குமிடத்து, அந்த முகாமைக் கூட்டுத்தாபனங்களின் (இவை இப்பிரிவில் இதனகத்துப் பின்னர் "கைமாற்றஞ்செய் முகாமைக் கூட்டுத்தாபனங்கள்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) உறுப்பினர்களாயிருப்போரான எல்லாக் கூறுகளினதும் சொந்தக்காரர்கள், கைமாற்றஞ்செய் முகாமைக் கூட்டுந்தாபனங்களால் கூட்டப்பட்ட கூட்டங்களில் ஆன முறையே அவரவரது விசேட நிர்மானங்கள் மூலம், அதே பயன்பாட்டுக்காலம் கொண்டனவும். அவர்களால் சொரியலான பங்குகள்கொண்டு பொதுவிலான வாடகைக் குடியிருப்பாளர்களாகக் கொண்டிருந்துவரப்பட்டனவுமான கூட்டாட்சியாதனத்தினுள் உள்ள பொது அமிசங்களை ஒன்று சேர்க்கும் நோக்கத்துக்கென, இயைபான கைமாற்றஞ்செய் முகாமைக் கூட்டுத்தாபனங்களானவை அக் கைமாற்றங்கள் பொது அமிசங்களைப் பாதிக்குமளவுக்கு பொதுவிலான வாடகைக் குடியிருப்பாளர்களாக கூறுகளின் எல்லாச் சொந்தக்காரர்கள் மாட்டு பொது அமிசங்களாக உரித்தாக்கப்படுவனவாக அத்தகைய பொது அமிசங்கள் வரும்வண்ணம் அக் கூட்டாட்சியாதனங்களின் பொது அமிசங்களின் கைமாற்றச் சாதனமொன்றை எழுதி நிறைவேற்றுதல் வேண்டுமெனப் பணிக்கலாம்; அத்துடன், அக்கைமாற்றச் சாதனம் பதிவு செய்யப்படுவதன்மீது, அத்தகைய பொது அமிசங்களானவை ஒன்றுசேர்க்கப்பட்டு, பதிவாளரால் கைமாற்றம் பதிவுசெய்யப்படுதற் தேதிக்கு முந்தியதாக எல்லாக் கூறுகளினதும் சொந்தக்காரர்களால் அவரவரது கூறுகள் தொடர்பில் அப்போது கொண்டிருக்கப்பட்ட அதே வரையுடம்பாடுகள், நிபந்தனைகள், பாரபந்தங்களுக்கு அமைவாகவும், அதே காலப்பகுதிக்கும், பயன்பாட்டுக்காலத்துக்கும், அவரவரது பங்குக் கூறுகளுக்கு விகிதாசாரமான பங்குகளில் கொண்டிருக்கப்படுதல் வேண்டும்.

(2) அத்தகைய கைமாற்றமானது அதனகத்துப் பெயரிடப்பட்ட கூறொன்றினது சொந்தக்காரர் ஒவ்வொருவராலும் கொண்டிருக்கப்படவேண்டிய சொரியலான விகிதாசாரப் பங்கைக் காட்டுதல் வேண்டும் என்பதுடன், இயைபான கைமாற்றஞ்செய் முகாமைக் கூட்டுத்தாபனங்களினால் எழுதி நிறைவேற்றப்படுதலும் வேண்டும்.

(3) பதினாறும் பிரிவின் (2) ஆம், (3) ஆம், (4) ஆம் உட்பிரிவுகளில் எடுத்துரைக்கப்பட்ட நடவடிக்கை முறையானது, ஏற்ற மாற்றங்களுடன், கைமாற்றஞ்செய் முகாமைக் கூட்டுத்தாபனங்களுக்கும், இப்பிரிவின்கீழ் ஒன்றுசேர்க்கப்படவேண்டியவையான கூட்டாட்சியாதனங்களின் எல்லாக் கூறுகளினதும் சொந்தக்காரர்களுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) பதிவாளரால் கைமாற்றம் பதிவுசெய்யப்படுதலைப் பின்பற்றி பொது அமிசங்கள் ஒன்றுசேர்க்கப்படுவதன் மீது--

(அ) கைமாற்றஞ்செய் முகாமைக் கூட்டுத்தாபனங்களானவை தனியொரு முகாமைக் கூட்டுத்தாபனமாக (இது இப்பிரிவில் இதனகத்துப் பின்னர் "கைமாற்றம்பெறு முகாமைக் கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ஒன்றுசேர்க்கப்படுதல் வேண்டும்; இது துணைப் பிரிவாக்கப்பட்ட கட்டிடங்களினதும், அவை தொடர்பான பொது அமிசங்களினதும் முகாமை தொடர்பான கருமங்கள் அனைத்துக்கும் பொறுப்பாக இருத்தல் வேண்டும்;

(ஆ) கைமாற்றஞ்செய் முகாமைக் கூட்டுத்தாபனங்களின் எல்லா உறுப்பினர்களும் கைமாற்றம்பெறு முகாமைக் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாதல் வேண்டும்;

(இ) கைமாற்றஞ்செய் முகாமைக் கூட்டுத்தாபனங்களினது முகாமைப் பேரவைகளின் உறுப்பினர்கள் அனைவரும், கைமாற்றம்பெறு முகாமைக் கூட்டுத்தாபனத்துக்கெனப் புதியதொரு முகாமைப் பேரவை தேர்ந்தெடுக்கப்படும் வரை, கைமாற்றம்பெறு முகாமைக் கூட்டுத்தாபனத்தின் முகாமைப் பேரவையினது உறுப்பினர்களாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ஈ) கைமாற்றஞ்செய் முகாமைக் கூட்டுத்தாபனங்களின் எல்லா ஆதனங்களும், கைமாற்றம்பெறு முகாமைக் கூட்டுத்தாபனத்துக்குக் கைமாற்றம் செய்யப்பட்டனவாகவும் அதற்கு உரித்தாக்கப்பட்டனவாகவும், அத்துடன் கைமாற்றஞ்செய் முகாமைக் கூட்டுத்தாபனங்

களின் எல்லாப் பொறுப்புக்களும் கைமாற்றம் பெறு முகாமைக் கூட்டுத்தாபனத்துக்குக் கைமாற்றம் செய்யப்பட்டனவாகவும், அதன் பொறுப்புக்களாக வந்துள்ளனவாகவும், கருதப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(உ) கைமாற்றஞ்செய் முகாமைக் கூட்டுத்தாபனங்களினுல் ஆன அல்லது அவற்றுக்கு எதிராக வான சட்ட நடவடிக்கைகள் யாவும், கைமாற்றம்பெறு முகாமைக் கூட்டுத்தாபனத்தால் அல்லது அவற்றுக்கு எதிராக தொடர்ந்து நடாத்தப்படலாம்.

(5) இந்தப் பிரிவில்—

(அ) "பொறுப்புக்கள்" என்பது கடமைகளே உள்ளடக்குகின்றது ; அத்துடன்

(ஆ) "ஆதனங்கள்" என்பது, ஒவ்வொரு விவரணத்தினதுமான உரிமைகளேயும் தத்துவங்களேயும் உள்ளடக்குகின்றது.

நீதிமன்றத்திற்கு விண்ணப்பித்தல்.

19. (1) பிரிவுகள் 16, 17, 18 என்பவற்றின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் பதிவு செய்யப்பட்ட கூட்டாட்சியாதனம் எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளதோ அந்த மாவட்டத்தின் மாவட்ட நீதிமன்றத்துக்கு (இது இதன்பின்னர் இப்பிரிவிலும், பிரிவு 20உ, பிரிவு 20க, பிரிவு 20ட என்பனவற்றிலும் "நீதிமன்றம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்),—

(அ) பொது அமிசங்களின் ஒரு பாகத்தைக் கைமாற்றஞ் செய்யுமாறு ; அல்லது

(ஆ) ஏதேனும் காணி அல்லது அதன் பாகம் அல்லது ஏதேனும் கூறு பொது அமிசங்களின் பாகமாக அமைந்திருப்பதாக அக்காணியின் அல்லது அதன் பாகத்தின் அல்லது கூறின் கைமாற்றத்தை ஏற்றுக்கொள்ளுமாறு ; அல்லது

(இ) இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட முகாமைக் கூட்டுத்தாபனங்களின் பொது அமிசங்களே ஒன்றுசேர்க்குமாறு,

முகாமைக் கூட்டுத்தாபனத்தை அல்லது முகாமைக் கூட்டுத்தாபனங்களேப் பணிப்பதான கட்டளேயொன்றுக்காக கூறுென்றின் சொந்தக்காரரொருவர் விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

(2) ஓராம் உட்பிரிவைப் பின்பற்றி நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்று செய்யப்பட்டுள்ளபோது, நீதிமன்றமானது விசேட தீர்மானமொன்றை நிறைவேற்றுவதற்

கெனக் கூட்டமொன்றைக் கூட்டுதல் நடைமுறைச் சாத்தியமற்றது எனவும், எல்லாக் கூறுகளினதும் சொந்தக்காரர்களினதும் பொதுஅமிசங்களில் பதிவு செய்யப்பட்ட அக்கறைகளைக் கொண்டுள்ள ஆட்களின தும் உரிமைகளையும் அக்கறைகளையும் முழுமையாகக் கருத்திற்கொண்டும்,—

(அ) பொது அமிசங்களின் பாகமொன்று கைமாற்றஞ் செய்யப்பட வேண்டியமை ; அல்லது

(ஆ) ஏதேனும் காணி அல்லது அதன் பாகம் அல்லது கூறு பொது அமிசங்களின் பாகமாக அமைய வேண்டியமை ; அல்லது

(இ) இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட முகாமைக் கூட்டுத்தாபனங்களின் பொது அமிசங்கள் ஒன்றுசேர்க்கப்படுதல்,

நீதியானதும் ஒப்புரவானதுமாகும் எனவும் திருப்திப் படுவதன்மீது, விடயத்திற்கேற்றவாறு அப்பொது அமிசங்களின் அத்தகைய பாகத்தைக் கைமாற்றஞ் செய்யுமாறு காணியின் அல்லது அதன் பாகத்தின் அல்லது கூறின் கைமாற்றத்தை ஏற்றுக்கொள்ளுமாறு அல்லது இரண்டு அல்லது அவற்றுக்கு மேற்பட்ட கூட்டாட்சியாதனங்கள் பொது அமிசங்களைப் பாதிக்குமளவுக்கு பொதுவிலான வாடகைக் குடியிருப்பாளர்களாக கூறுகளின் எல்லாச் சொந்தக்காரர்கள் மாட்டும் ஒரு தனிக் கூட்டாட்சியாதனமாக உரித்தாக்கப்படுவனவாக அத்தகைய கூட்டாட்சியாதனங்கள் வரும்வண்ணம் அத்தகைய கூட்டாட்சியாதனங்களின் கைமாற்றச் சாதனமொன்றை எழுதி நிறைவேற்றி அக்கைமாற்றத்தைப் பதிவாளரிடம் சமர்ப்பிக்குமாறு முகாமைக் கூட்டுத்தாபனத்தை அல்லது முகாமைக் கூட்டுத்தாபனங்களைப் பணிக்கின்றதான கட்டளையொன்றை ஆக்கலாம்.

(3) பதிவுசெய்யப்படுவதற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட அத்தகைய கைமாற்றச் சாதனமொவ்வொன்றும் அல்லது கைமாற்றமொன்றை ஏற்றுக்கொள்ளுதற் சாதனமொவ்வொன்றும், அத்தகைய கைமாற்றத்தை அல்லது கைமாற்றமொன்றை ஏற்றுக்கொள்ளுதலைப் பணிக்கின்றதான நீதிமன்றக் கட்டளையின் சான்றுபடுத்தப்பட்ட உண்மைப் பிரதியொன்றுடன் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும்.

(4) கைமாற்றமானது பதிவாளரால் பதிவுசெய்யப்படுவதன்மீது—

(அ) பொது அமிசங்கள் எல்லாவற்றினதும் அல்லது அவற்றின் பாகமொன்றினது கையுதிர்ப்பொன்றின் விடயத்தில், எல்லாக் கூறுகளினதும் சொந்தக்காரர்களும், பொது அமிசங்களில் பதிவுசெய்யப்பட்ட அக்கறைகளைக் கொண்டி

ருப்போரான வேறு ஆட்களும் நீதிமன்றக் கட்டளையின் நியதிகளை ஏற்றுக்கொள்வதற்கு பிணிக்கப்பட்டவர்களாதல் வேண்டும் என்பதுடன், 16 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், ஏற்ற மாற்றங்களுடன், அத்தகைய கைமாற்றத்துக்கு ஏற்புடையனவாதலும் வேண்டும்;

(ஆ) பொது அமிசங்களுக்கான ஏதேனும் சேர்ப்புக்களின் விடயத்தில், 17 ஆம் பிரிவின் (3) ஆம், (4) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள், ஏற்ற மாற்றங்களுடன், அத்தகைய கைமாற்றத்துக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்; அத்துடன்

(இ) இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட முகாமைக் கூட்டுத்தாபனங்களின் பொது அமிசங்கள் ஒன்றுசேர்க்கப்படும் விடயத்தில், 16 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவினதும், 18 ஆம் பிரிவின் (2) ஆம், (4) ஆம், (5) ஆம் உட்பிரிவுகளினதும் ஏற்பாடுகள், ஏற்ற மாற்றங்களுடன், அத்தகைய ஒன்றுசேர்ப்புக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

உடைமைப் பேறிலான ஒருமைப்பாடு.

20. இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட கூறுகளிலான உடைமைப்பேறிலான ஒருமைப்பாடு, இச் சட்டத்தினால் உட்கிடையாகக் கொள்ளப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட வசதியுரிமைகளை அல்லது மட்டுப்படுத்தல்களை அழித்தலாகாது; ஆனால், அத்தகைய ஒருமைப்பாடு இல்லாதொழிவதன்மீது, உடைமைப்பேறு எப்போதுமே ஒருமைப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்றாற்போன்று அவை முழுவலுவும் பயனும் உடையதாகத் தொடர்ந்திருந்துவருதல் வேண்டும்.

பங்குக் கூறுகள்.

20அ. (1) ஒரு கூட்டாட்சியாதனமாகப் பதிவுசெய்யப்படுவதற்கெனச் சமர்ப்பிக்கப்பட்ட ஒவ்வொரு கூறினதும் வரைபடம் ஒவ்வொன்றிலும் காட்டப்பட்ட (பங்குப் பெறுமதி குறித்தொதுக்கப்படுதலாகாததான ஒரு துணை நிலக்கூறின் விடயத்தில் தவிர) பங்குப் பெறுமதியானது பங்குக் கூறுகளாக எடுத்துக்கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) பங்குக் கூறுகள் பின்வருவனவற்றைத் தீர்மானித்தல் வேண்டும்—

(அ) எல்லாக் கூறுகளினதும் சொந்தக்காரர்களின் வாக்களிப்பு உரிமைகள்;

(ஆ) பொது அமிசங்களிலான ஒரு கூறின் ஒவ்வொரு சொந்தக்காரரினதும் சொரியலான பங்குத் தொகையளவு; அத்துடன்

(இ) 20எ என்னும் பிரிவைப் பின்பற்றி முகாமைக் கூட்டுத்தாபனத்தால் விதித்தறவிடப்படுவனவும், கூறொன்றின் ஒவ்வொரு சொந்தக்காரரால் செலுத்தப்படற்பாலனவுமான விகிதாசாரம்.

முகாமைக் கூட்டுத்தாபனங்களின் அமைப்பு முதலியன.

20ஆ. (1) கூறுகளின் சொந்தக்காரர்கள், இச்சட்டத்தின் பயன்கொண்டு, கூட்டாட்சியாதனம் பதிவு செய்யப்படுவதன் மீது, இடையறு வழியுரிமையையும், பொது இலச்சினையொன்றையுங்கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன், "முகாமைக் கூட்டுத்தாபனம்" என அழைக்கப்படுதலும் வேண்டும்.

(2) முகாமைக் கூட்டுத்தாபனமானது—

(அ) அதனால் செய்யப்பட்ட ஏதேனும் ஒப்பந்தம் மீது வழக்குத் தொடரலாம் அத்துடன் அதற்கெதிராக வழக்குத் தொடரவும்படலாம்;

(ஆ) பொது அமிசங்களைப் பாதிக்கின்ற ஏதேனும் கருமம் தொடர்பாக வழக்குத் தொடரலாம், அத்துடன் அதற்கெதிராக வழக்குத் தொடரவும்படலாம்; அத்துடன்

(இ) எந்தக் கூட்டாட்சியாதனத்துக்கென எல்லாக் கூறுகளினதும் சொந்தக்காரர்கள் கூட்டாகப் பொறுப்பாயிருக்கின்றனரோ அக்கூட்டாட்சியாதனத்துடன் தொடர்புபட்ட ஏதேனும் கருமம் தொடர்பாக அதற்கெதிராக வழக்குத் தொடரப்படலாம்.

(3) முகாமைக் கூட்டுத்தாபனமானது, பேரவையொன்றைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும் என்பதுடன் அப்பேரவை, ஒரு பொதுக்கூட்டத்தில் அந்த முகாமைக் கூட்டுத்தாபனத்தால் சுமத்தப்பட்ட ஏதேனும் மட்டுப்படுத்தலுக்கு, அல்லது வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புக்கு அமைவாக முகாமைக் கூட்டுத்தாபனத்தின் சார்பில் அதன் கடமைகளைப் புரிதல் வேண்டுமென்பதுடன் முகாமைக் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களைக்கொண்டு நடாத்துதலும் வேண்டும்; அத்துடன் அது அந்த நோக்கத்துக்கென முகாமைக் கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களுள் எவற்றையும் பிரயோகிக்கலாம்.

(4) இச்சட்டத்துக்கான முதலாவது அட்டவணையின் ஏற்பாடுகள் அந்த முகாமைக் கூட்டுத்தாபனம் தொடர்பாகவும் அதன் பேரவை தொடர்பாகவும் பயனுறுவனவாதல் வேண்டும்.

(5) முகாமைக் கூட்டுத்தாபனமானது, இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையின் ஏற்பாடுகளுள் எவற்றினதும், எவையேனும் தேவைப்பாடுகளுடன் அல்லது அவ்வேற்பாடுகளினால் சுமத்தப்பட்ட கடமைகளுடன் இணங்கியொழுகுவதில் தவறுகை செய்யின், முகா

மைக் கூட்டுத்தாபனமும், அந்த மீறுகைக்கு அல்லது தவறுகைக்கு அறிந்துகொண்டு திறத்தவரொருவரா யிருக்கும் அதன் பேரவையின் ஒவ்வோர் உறுப்பினரும் அல்லது கூறொன்றின் ஒவ்வொரு சொந்தக்காரரும் இச் சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(6) இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையின் ஏற்பாடுகள் எவற்றுடனும் இணங்கியொழுகுவதில் தவறுகை செய்கின்ற அல்லது இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையின் ஏற்பாடுகள் எவற்றினதும் தேவைப்பாடுகளுடன், அல்லது அவற்றினால் அதன்மீது சுமத்தப்படும் எவையேனும் கடமைகளுடன் இணங்கியொழுகுவதில் தவறுகை செய்கின்றவரான முகாமைப் பேரவையின் உறுப்பினரெவரும், கூறொன்றின் சொந்தக்காரரெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(7) இப்பிரிவில் "எல்லாக் கூறுகளினதும் சொந்தக்காரர்கள்" என்பது, 20ட என்னும் பிரிவைப் பின்பற்றி துணைப்பிரிவாக்கப்பட்ட கட்டிடம் அழிக்கப்படுவதன் மீது கூட்டாட்சியாதனத்துக்கு உரித்துடையோரான ஆட்களை உள்ளடக்கும்.

முகாமைக் கூட்டுத்தாபனங்களின் கடமைகள் முதலியன.

20இ. (1) முகாமைக் கூட்டுத்தாபனத்தின் கடமைகள் பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும் :—

(அ) பொது அமிசங்களை முகாமைசெய்தலும் தகுந்தமுறையில் பேணுதலும் அவற்றை நல்ல நிலைமையிலும் பயன்தருவகையிலும் வைத்திருத்தலும் ;

(ஆ) ஏகமனதான தீர்மானம் மூலம் வேறுவகையில் பணிக்கப்பட்டாலன்றி, துணைப்பிரிவாக்கப்பட்ட கட்டிடத்தை அதன் மாற்றீட்டுப் பெறுமதியளவுக்கு, தீயபாயத்துக்கும் இச்சட்டத்தின்கீழ் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு உறுகண்களுக்கும் எதிராகக் காப்பீடு செய்தலும், காப்பீடுசெய்யப்பட்ட நிலையில் வைத்திருத்தலும் ;

(இ) சட்டத்தினால் தேவைப்படுத்தப்படக்கூடியவாறாக துணைப்பிரிவாக்கப்பட்ட கட்டிடத்தின் அத்தகைய வேறு காப்புறுதியை ஏற்படுத்துதல் ;

(ஈ) எல்லாக் கூறுகளினதும் சொந்தக்காரர்கள் விசேட தீர்மானம் மூலம் பணிக்கக்கூடியவாறான அத்தகைய வேறு உறுகண்களுக்கு எதிராகக் காப்புறுதிசெய்தல் ;

(உ) துணைப்பிரிவாக்கப்பட்ட கட்டடத்துக்கான சேதம் தொடர்பில் அதனாற் பெறப்படும்

காப்புறுதிப் பணங்களை, அவ்வாறு செய்வது சட்டபூர்வமானதாக இருக்கக்கூடிய அளவுக்கு அதனை மீளக் கட்டுவதற்கும், முன்னைய நிலைக்குக் கொணருதற்கும் என உடனடியாகப் பிரயோகித்தல்;

(ஊ) அதனால் ஏற்படுத்தப்பட்ட ஏதேனும் காப்புறுதிப் பூட்கை மீதான கட்டுப்பணங்களைச் செலுத்துதல்;

(எ) பொது அமிசங்கள் மீதான ஏதேனும் தொல்லையை அகற்றுமாறு தேவைப்படுத்தும், அல்லது பொது அமிசங்கள் அல்லது கூட்டாட்சியாதனம் மீதான ஏதேனும் கட்டடம் அல்லது வேறு சீர்திருத்தம் தொடர்பில் திருத்தங்களை அல்லது வேறு வேலையைச் செய்யக் கட்டளையிடும் ஏதேனும் அரசாங்க, பகிரங்க அல்லது நியதிச்சட்டமுறையான அதிகார சபையினால் ஆக்கப்பட்ட ஏதேனும் அறிவித்தலுக்கு அல்லது கட்டளைக்கு இணங்கியொழுகுதல்;

(ஏ) கூறொன்றின் சொந்தக்காரர், நியாயமானவொரு காலத்துள் அவ்வாறு செய்யத்தவறினால், கூறுகளுள் எவையேனும் தொடர்பில் வழங்கப்பட்ட அல்லது ஆக்கப்பட்ட (எ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளவாறான அத்தகைய ஏதேனும் அறிவித்தல் அல்லது கட்டளையுடன் இணங்கியொழுகுதல்; அத்துடன்

(ஐ) எந்தக் காணிமீது துணைப்பிரிவாக்கப்பட்ட கட்டடமானது நிறுவப்படுகின்றதோ அந்தக் காணி மீதான வாடகை ஏதேனுமிருப்பின் அதனைச் செலுத்துதல்.

(2) முகாமைக் கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும் :—

(அ) ஓராம் உட்பிரிவின் (ஏ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளவாறான அத்தகைய ஏதேனும் அறிவித்தலுடன் அல்லது கட்டளையுடன் இணங்கியொழுகுகையில் முகாமைக் கூட்டுத்தாபனத்தினால் ஏதேனும் கூறு தொடர்பில் செலவிடப்பட்ட ஏதேனும் பணத் தொகையை அக்கூறின் எவரேனும் சொந்தக்காரரிடமிருந்து அறவிடுவதற்கென சட்டபூர்வமான நடபடிகளை எடுத்தல்;

(ஆ) எல்லாக் கூறுகளினதும் சொந்தக்காரர்கள் பொது அமிசங்களைத் துய்த்தல் தொடர்பில் அவர்களால் பயன்படுத்தப்படுவதற்கென அசைவுள்ள ஆதனத்தைக் கொள்வனவு செய்தல், வாடகைக்கு எடுத்தல் அல்லது வேறு வகையிற் கொள்ளல்;

(இ) அதன் தத்துவங்களைப் பிரயோகித்தல் வகையாக அல்லது அதன் கடமைகளைப் புரிதல் வகையாக அதற்குத் தேவைப்படும் பணங்களைக் கடனெடுத்தல் ;

(ஈ) அதனால் கடனெடுக்கப்பட்ட பணங்களின் மீள் கொடுப்பனவுக்கும், அவற்றின்மீதான வட்டிக் கொடுப்பனவுக்கும், உரிபெயர்தரு சாதனம் மூலம், அல்லது முகாமை நிதியத்தின் மாட்டான, ஏற்கனவே அறவிடப்பட்டுள்ளனவாயினுஞ்சரி அல்லாதனவாயினுஞ்சரி, செலுத்தப்படாதுள்ள உதவுதொகைகள் மீதான தாக்கீடொன்றின்மூலம் பிணைப்பொறுப்பளித்தல்; அத்துடன்

(உ) இச்சட்டத்தின்கீழான அதன் கடமைகளைப் புரிவதற்கும், இச்சட்டத்துக்கான இரண்டாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள துணைவிதிகளை வலுவுக்கிடுதற்கும் அவசியமான சட்டபூர்வமான நடபடிகளை எடுத்தல்.

(3) முகாமைக் கூட்டுத்தாபனமானது—

(அ) ஓராம் உட்பிரிவின் (ஆ) அல்லது (இ) என்னும் பந்தியின் கீழான ஏதேனும் காப்புறுதியை ஏற்படுத்தும் நோக்கத்துக்கென, துணைப்பிரிவாக்கப்பட்ட கட்டடத்தில் அதன் மாற்றீட்டுப் பெறுமதிக்குச் சமனான காப்புறுதி நலனைக் கொண்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) ஓராம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின் கீழான ஏதேனும் காப்புறுதியை ஏற்படுத்தும் நோக்கத்துக்கென, காப்புறுதியின் விடயப் பொருளில் காப்புறுதி நலனைக் கொண்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) துணைப்பிரிவாக்கப்பட்ட கட்டடம் தொடர்பில் முகாமைக் கூட்டுத்தாபனத்தால் இப்பிரிவின்கீழ் எடுக்கப்பட்ட காப்புறுதிப் பூட்கையொன்று, துணைப்பிரிவாக்கப்பட்ட அதே கட்டடம் தொடர்பில் இப்பிரிவின் கீழ் எடுக்கப்பட்ட இன்னொரு காப்புறுதிப் பத்திரமொன்று தவிர்ந்த வேறேதேனும் காப்புறுதிப்பத்திரத்துடன் சேர்த்து உதவுதொகையளிக்கப்பட வருதற்கு இலக்காதலாகாது.

(5) முகாமைக் கூட்டுத்தாபனமானது எவையேனும் திருத்தங்களை ஏதேனும் வேலையை அல்லது செயலைப் புரிவதாக (அத்திருத்தங்கள், வேலை அல்லது செயல் ஏதேனும் அரசாங்க அல்லது நியதிச்சட்டமுறை அதிகாரசபையினால் அதற்குச் சேர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் அறிவித்தல் அல்லது கட்டளையின் விளைவாகப் புரியப்பட்டிருப்பினுஞ்சரி அல்லாவிடினுஞ்சரி), அத்துடன் அத்திருத்தங்கள், வேலை அல்லது செயல் முழுமையாக

அல்லது பொருண்மையளவில் கூறொன்றின் சொந்தக்காரரது பொறுப்பாக அல்லது பொறுப்புடைமையாக மாத்திரம் இருந்ததெனில், அல்லது முழுமையாக அல்லது பொருண்மையளவில் ஒருசில கூறுகள் நன்மைக்கானதாக மாத்திரம் இருந்ததெனில், அல்லது முழுமையாக அல்லது பொருண்மையளவில் ஒருசில கூறுகளின் சொந்தக்காரர்களது பொறுப்பாக அல்லது பொறுப்புடைமையாக மாத்திரம் இருந்ததெனில், அத் திருத்தங்களை, வேலையை அல்லது செயலைப் புரிவதில் முகாமைக் கூட்டுத்தாபனத்தால் செலவிடப்பட்ட ஏதேனும் பணமானது—

(அ) அத்திருத்தங்கள், வேலை அல்லது செயல் முழுமையாக அல்லது பொருண்மையளவில் கூறொன்றின் சொந்தக்காரரது பொறுப்பாக அல்லது பொறுப்புடைமையாக மாத்திரம் இருந்தவிடயத்தில்,—

(i) அத்திருத்தங்கள், வேலை அல்லது செயல் புரியப்பட்ட நேரத்தின்போது கூறின் இயைபான சொந்தக்காரரிடமிருந்தும்;

(ii) வழக்கு தொடங்கப்பட்ட நேரத்தின் போது கூறின் இயைபான சொந்தக்காரரிடமிருந்தும்,

கூட்டாகவும் தனித்தனியாகவும் அதற்கு செல்மதியான தனிசொன்றாக தகுதிவாய்ந்த நியாயாதிக்கமுடைய ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னரான வழக்கொன்றில் முகாமைக் கூட்டுத்தாபனத்தால் அறவிடப்படற்பாலதாதல் வேண்டும்; அல்லது

(ஆ) அத்திருத்தங்கள், வேலை அல்லது செயல் முழுமையாக அல்லது பொருண்மையளவில் ஒருசில கூறுகளின் நன்மைக்கானதாக மாத்திரம் இருந்தவிடயத்தில் அல்லது முழுமையாக அல்லது பொருண்மையளவில் ஒருசில கூறுகளின் சொந்தக்காரர்களது பொறுப்பாக அல்லது பொறுப்புடைமையாக மாத்திரம் இருந்தவிடயத்தில்—

(i) அத்திருத்தங்கள், வேலை அல்லது செயல் புரியப்பட்ட நேரத்தின்போது அத்தகைய கூறுகள் ஒவ்வொன்றினதும் இயைபான சொந்தக்காரரிடமிருந்தும்;

(ii) வழக்கு தொடங்கப்பட்ட நேரத்தின் போது அத்தகைய கூறுகள் ஒவ்வொன்றினதும் இயைபான சொந்தக்காரரிடமிருந்தும்,

கூட்டாகவும் தனித்தனியாகவும் அதற்குச் செல்மதியான தனிசொன்றாக தகுதிவாய்ந்த நியாயாதிக்கமுடைய ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னரான வழக்கொன்றில் முகாமைக் கூட்டுத்தாபனத்தால் அறவிடப்படற்பாலதாதல் வேண்டும் என்றிருப்பதாக, ஏதேனும் கூறு தொடர்பில் எவரேனும் சொந்தக்காரராலும் முன்னைய சொந்தக்காரராலும் செலுத்தப்படற்பாலதான பணத்தொகையானது, அக்கூறின் பங்குக்கூறு அவ்வெல்லாக் கூறுகளினதும் கூட்டுமொத்தமான பங்குக் கூறுகளுக்கு எவ்விகிதாசாரமாக அமைந்துள்ளதோ அவ்விகிதாசாரத்தைவிட மேற்படாதிருத்தல் வேண்டும்.

(6) ஐந்தாம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட திருத்தங்கள், வேலை அல்லது செயல் புரியப்பட்ட நேரத்தில் கூறினது சொந்தக்காரர் அல்லாதவரான, கூறொன்றின் சொந்தக்காரரொருவர், அக்கூறில் அவர் உரித்தை அல்லது அக்கறையினைக்கொண்ட தேதியன்று அல்லது அதற்கு முன்னரான இருபத்தொரு நாட்களுக்குள்ளாக எந்நேரத்திலேனும், அக்கூறு தொடர்பில் அவ்வுட்பிரிவின்கீழ் முகாமைக் கூட்டுத்தாபனத்தால் அறவிடப்படற்பாலதான தொகை ஏதேனும் இருப்பின், அத்தொகைபற்றி வினவுவதாக முகாமைக் கூட்டுத்தாபனத்துக்கு எழுத்திலான வேண்டுதலொன்றைச் செய்திருந்து, அத்துடன் முகாமைக் கூட்டுத்தாபனமானது—

(அ) உட்பிரிவு (5) ஐப் பின்பற்றி அக்கூறு தொடர்பில் முகாமைக் கூட்டுத்தாபனத்தால் எப்பணத்தொகையும் அப்போது அறவிடப்படற்பாலதன்று என சான்றுபடுத்தியிருப்பின்; அல்லது

(ஆ) அவ்வேண்டுதல் சேர்ப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து பதினன்கு நாட்களுக்குள்ளாக எந்நேரத்திலேனும் அவ்வேண்டுதலுக்கு மறுமொழியொன்றைக் கொடுத்திராவிடின்,

அவ்வுட்பிரிவின்கீழ் செல்மதியான பணத்தொகை எதனையும் முகாமைக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்துதற்கு ஆளாதலாகாது; அத்துடன் (5) ஆம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் பணத்தொகை செல்மதியாயுள்ளதென முகாமைக் கூட்டுத்தாபனமானது சான்றுபடுத்தியுள்ளவிடத்து, அத்தகைய சொந்தக்காரரின் பொறுப்பானது அவ்வாறு சான்றுபடுத்தப்பட்ட பணத்தொகைக்கு மட்டுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(7) முகாமைக் கூட்டுத்தாபனமானது, (ஏதேனும் அரசாங்க அல்லது நியதிச்சட்டமுறை அதிகாரசபையால் அதற்குச் சேர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் அறிவித்தல் அல்லது கட்டளையின் விளைவாக அச்செலவினம் உறப்பட்டதாயினுஞ்சரி அல்லாவிடினுஞ்சரி திருத்

தங்கள், வேலை அல்லது செயல் புரியப்பட்டதாயி னுஞ்சரி அல்லாவிடினுஞ்சரி) ஏதேனும் செலவினத்தை உற்றிருந்து, அல்லது எவையேனும் திருத்தங்களை, வேலையை அல்லது செயலைப் புரிந்திருந்து, அத்துடன் அச்செலவினம் அல்லது திருத்தங்கள், வேலை அல்லது செயல் எவரேனும் ஆளின் அல்லது அவரது வாடகைக் குடியிருப்பாளரின், குத்தகைக்காரரின், உரிமம்பெற்ற வரின் அல்லது அழைப்பாளியின் கணக்கிலான ஏதே னும் வேண்டுமென்ற அல்லது கவனயீனமான செயலின் அல்லது செய்யாமையின் காரணமாக அல்லது அதன் துணைவிதிகளின் ஏற்பாடுகள் எதனதும் மீறுகை கார ணமாக அவசியமாக்கப்பட்டிருந்தவிடத்து, அத்திருத் தங்களை, வேலையை அல்லது செயலைப் புரிவதில் செல விடப்பட்ட ஏதேனும் பணத்தொகையானது, தகுதி வாய்ந்த நியாயாதிக்கமுடைய ஏதேனும் நீதிமன்றத்தி லான வழக்கொன்றில் தனிசொன்றாக அந்த ஆளிட மிருந்து அதனால் அறவிடப்படற்பாலதாதல் வேண்டும்.

(8) இப்பிரிவின் பொதுமையானது, முகாமைக் கூட் டுத்தாபனத்தின்மீது தத்துவமொன்றை அளிக்கும் அல் லது கடமையொன்றைச் சுமத்தும் இச்சட்டத்தின் வேறு எவையேனும் ஏற்பாடுகளினால் பங்கப்படுத்தப் படுதலாகாது.

காப்புறுதிப் பூட்கை.

20ஈ. (1) துணைப்பிரிவாக்கப்பட்ட கட்டடம் ஒன் றன்மீது செய்யப்பட்ட ஏதேனும் உளதாம் காப்புறுதிப் பூட்கை எவ்வாறிருப்பினும், கூறொன்றின் சொந்தக்கார ரானவர் அவரது கூறுக்கான சேதம் தொடர்பில் அதன் மீதான உளதான ஈடு ஒன்றினால் பிணைப்பொறுப்பளிக் கப்பட்ட பணத்தொகைக்குச் சமமானதாயுள்ளதும், அக்கூறுக்கு விளைந்த சேதம் அல்லது இழப்பு நிகழ்ந்த தேதியில் செல்மதியாகக் கொடுபடவேண்டியதுமான தொகையொன்றுக்கு காப்புறுதிப் பூட்கையொன்றினைச் செய்துகொள்ளலாம்.

(2) அத்தகைய காப்புறுதிப் பூட்கை எதுவும் வலு விலிருக்குமிடத்து—

(அ) அப்பூட்கையின் நியதிகளுக்கும் நிபந்தனை களுக்கும் அமைவாக, காப்புறுதியாளரால். முறையே அவர்களின் முந்துரிமை ஒழுங்கு முறைப் பிரகாரம் பதிவுசெய்யப்பட்ட ஈடு களுக்கான அப்பூட்கையின்கீழ் கொடுப்பனவு கள் செய்யப்படுதல் வேண்டும்;

(ஆ) அப்பூட்கையின் நியதிகளுக்கும் நிபந்தனை களுக்கும் அமைவாக, காப்புறுதியாளர், அதன்கீழ் பின்வருவனவற்றுள் எது குறைந்த பணத்தொகையோ அதனைச் செலுத்துவ தற்கு ஆளானவராதல் வேண்டும் :—

(i) பூட்கையில் கூறப்பட்ட பெறுமதி;

(ii) சேதத்தின் அல்லது இழப்பின் தொகை; அல்லது

(iii) கூறின்மீது தாக்கீடுசெய்யப்பட்ட ஈட்டினை விடுவிப்பதற்கு, சேதம் அல்லது இழப்பு நிகழ்ந்த தேதியில் போதுமானதான தொகை;

(இ) அவ்வாறு செலுத்தப்பட்ட பணத்தொகையானது கூறின்மீது தாக்கீடுசெய்யப்பட்ட ஈடு ஒன்றினை விடுவிக்க அவசியமான பணத் தொகைகளுக்குச் சமமானதாக இருக்குமிடத்து, காப்புறுதியாளர் ஈட்டின் கைமாற்றமொன்றுக்கு உரித்துடையவராதல் வேண்டும்; அத்துடன்

(ஈ) அவ்வாறு செலுத்தப்பட்ட பணத்தொகையானது கூறின்மீது தாக்கீடுசெய்யப்பட்ட ஈடு ஒன்றினை விடுவிப்பதற்கு அவசியமான பணத் தொகையைவிடக் குறைந்ததாக இருக்குமிடத்து, காப்புறுதியாளர், அவ்வாறு செலுத்தப்பட்ட பணத்தொகைமீது (3) ஆம் உட்பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக உடன்பட்டுக்கொள்ளப்பட்ட நியதிகள் நிபந்தனைகள் மீது, அல்லது உடன்பாடு தவறப்படுமித்து, ஈட்டில் அடக்கப்பட்டுள்ளவாறான அதே நியதிகள் நிபந்தனைகளின்மீது. பிணைப்பொறுப்பளிக்கப்படுதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின் நோக்கங்களுக்காக, கூறொன்றின் சொந்தக்காரரால் காப்புறுதிப் பூட்கையொன்று செய்துகொள்ளப்படு முன்னராயினும்சரி பின்னராயினும்சரி, எந்நேரத்திலும், எவரேனும் காப்புறுதியாளரும் ஈடுபெற்றவரும், கீழ் ஈட்டின் நியதிகள் நிபந்தனைகள் பற்றி உடன்பட்டுக் கொள்ளலாம்.

(4) இப்பிரிவிலுள்ள எதுவும் கூறொன்றின் சொந்தக்காரர் அவரது கூறுக்கு ஏற்படும் சேதம் அல்லாத வேறு கட்டுறுத்துகளுக்கு எதிராகக் காப்புறுதி செய்து கொள்வதற்கான அவரது உரிமையை மட்டுப்படுத்துவதாதலாகாது.

(5) இப்பிரிவினால் அதிகாரமளிக்கப்பட்டதும் கூறொன்றின் சொந்தக்காரரால் அவரின் கூறுக்கு ஏற்படும் சேதம் தொடர்பாக அவரால் எடுக்கப்பட்டதுமான காப்புறுதிப் பூட்கையானது, அதே கூறுக்கு ஏற்படும் சேதம் தொடர்பில், இப்பிரிவின்கீழ் எடுத்துக் கொள்ளப்படும் இன்னொரு பூட்கை தவிர்ந்த வேறு ஏதேனும் காப்புறுதிப் பூட்கையுடன் சேர்த்து உதவுதொகை அளிக்கப்படவருதற்கு இலக்காதலாகாது.

(6) இப்பிரிவின் ஏற்பாடுகளானவை, காப்புறுதி தொடர்பான எச்சட்டத்தினதும் ஏற்பாடுகள் எவ்வா றிருப்பினும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

நீதிமன்றத்தால் நிருவாகி நியமிக்கப் படுதல்.

20உ. (1) நீதிமன்றமானது, முகாமைக் கூட்டுத்தாப னத்தினது, கூறொன்றின் சொந்தக்காரரது அல்லது கூறொன்றில் பதிவுசெய்யப்பட்ட அக்கறையொன்றைக் கொண்டிருப்பவரான வேறு எவரேனும் ஆளினது அல் லது குழுவினது விண்ணப்பத்தின்மீது, நிர்ணயிக்கப் பட்ட ஒரு காலப்பகுதிக்கு அல்லது காலப்பகுதி நிர்ண யிக்கப்படாமலே, ஊதியம் அல்லது வேறுவகையானவை தொடர்பில் நீதிமன்றம் பொருத்தமானவையென எண் ணும் அத்தகைய நியதிகள் நிபந்தனைகள்மீது முகா மைக் கூட்டுத்தாபனத்துக்கான நிருவாகியொருவரை நியமிக்கலாம்.

(2) நிருவாகியினது ஊதியமும் செலவுகளும் முகா மைக் கூட்டுத்தாபனத்தின் முகாமை நிதியத்தின் மீதான தாக்கீடொன்றுதல் வேண்டும்.

(3) முகாமைக் கூட்டுத்தாபனம் புறநீங்கலாக, நிரு வாகியானவர், முகாமைக் கூட்டுத்தாபனத்தின் தத்து வத்தினைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், முகாமைக் கூட்டுத்தாபனத்தின் கடமைகளை அல்லது அவற்றுள் நீதிமன்றம் கட்டளையிடக்கூடியவாறான அத் தகைய கடமைகளைப் புரிதலும் வேண்டும் :

ஆயின், இவ்வுட்பிரிவின் ஏற்பாடுகளானவை, நிரு வாகியினை அகற்றுவதற்கு அல்லது மாற்றீடு செய்வ தற்கு (4) ஆம் உட்பிரிவின்கீழ் முகாமைக் கூட்டுத்தாப னத்தால் விண்ணப்பம் ஒன்று செய்யப்படுதலைத் தடுப்ப தாதலாகாது.

(4) நீதிமன்றமானது, நிருவாகியினது, அல்லது (1) ஆம் உட்பிரிவின்கீழ் விண்ணப்பம் செய்வதற்கு உரித் துடையவரான அல்லது உரித்துடையதான எவரேனும் ஆளினது அல்லது குழுவினது விண்ணப்பத்தின்மீது நிருவாகியை அகற்றலாம் அல்லது மாற்றீடு செய்யலாம்.

(5) நிருவாகியொருவர் நியமனஞ் செய்யப்படும் போது உடனடியாக, அவரது நியமனத்தைச் செய்த நீதிமன்றக் கட்டளையின் அலுவலகப் பிரதியொன்றைப் பதிவாளரிடமும் பொதுவசதிகள் சபையிடமும் சமர்ப் பித்தல் வேண்டும்.

(6) நிருவாகியொருவரை அகற்றுவதற்கான அல்லது மாற்றீடு செய்வதற்கான நீதிமன்றக் கட்டளையொன்று எவரேனும் ஆளுக்கு வழங்கப்பட்டுள்ளவிடத்து, அத்த கைய ஆள், அத்தகைய அகற்றுகை அல்லது மாற்றீடு பற்றிய அலுவலகப் பிரதியொன்றை பதிவாளரிடமும் பொதுவசதிகள் சபையிடமும் சமர்ப்பித்தல் வேண்டும்.

(7) இப்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் விண்ணப்பத்தின்மீது, நீதிமன்றமானது, செலவுதொகைக் கொடுப்பனவுக்கென அது பொருத்தமானதெனக் கருதுவதான அத்தகைய கட்டளையை ஆக்கலாம்.

**நிருவாகி நியமிக்கப்படும்வரையில் பொதுவசதிகள் சபை மைக் கூட்டுத்யானது முகாதாபனத்தின் கடமைகளைப் புரிதல்.**

20ஊ. (1) முகாமைக் கூட்டுத்தாபனமானது திருப்திகரமாக அதன் கடமைகளை நிறைவேற்றவில்லை என அல்லது அதன் அலுவல்களைப் புரியவில்லை என பொதுவசதிகள் சபை திருப்தியடைந்து, அத்துடன் முகாமைக் கூட்டுத்தாபனத்துக்கும், எல்லாக் கூறுகளினதும் சொந்தக்காரர்கட்கும் அக்கறையுடையதான கருமங்கள் தொடர்பில் குறித்த சில கடமைகள் அவசரமாக நிறைவேற்றப்படுதல் வேண்டுமென அல்லது உடனடி நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டுமென அபிப்பிராயப்படுமிடத்து, பொதுவசதிகள் சபையானது, 20உ என்னும் பிரிவின்கீழ் நிருவாகியொருவர் நியமிக்கப்படும் அத்தகைய காலம்வரை முகாமைக் கூட்டுத்தாபனத்தின் தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், முகாமைக் கூட்டுத்தாபனத்தின் கடமைகளைப் புரியலாம்.

(2) பொதுவசதிகள் சபையால் முகாமைக் கூட்டுத்தாபனத்துக்காகவும், முகாமைக் கூட்டுத்தாபனத்தின் சார்பிலும் உறப்பட்ட செலவுகள் முகாமைக் கூட்டுத்தாபனத்தின் முகாமை நிதியத்தின்மீதான தாக்கீடொன்றுதல் வேண்டும்.

(3) பொதுவசதிகள் சபையானது இப்பிரிவின்கீழ் அதற்கு அளிக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகித்துள்ளபோது, அது சாத்தியமான இயன்றவிரைவில் சம்பந்தப்பட்ட முகாமைக் கூட்டுத்தாபனத்துக்கு, அல்லது அதன் ஒவ்வோர் உறுப்பினருக்கும் அல்லது துணைப்பிரிவாக்கப்பட்ட கட்டடத்தினையும் பொதுவசதிகளையும் முகாமை செய்வதற்குப் பொறுப்பான ஆளுக்கு அது பற்றி அறிவித்தல் வேண்டும்.

**துணைப்பிரிவாக்கப்பட்ட கட்டடங்களின் கட்டுப்பாடு, முகாமை முதலியவற்றை ஒழுங்குபடுத்துவதற்கான துணைவிதிகள்.**

20எ. (1) கூட்டாட்சியாதன வரைபடமொன்றில் காட்டப்பட்ட துணைப்பிரிவாக்கப்பட்ட கட்டடம் ஒவ்வொன்றும், கூறுகளையும் பொதுஅமிசங்களையும் கட்டுப்படுத்துவதற்கும் முகாமை செய்வதற்கும் நிருவகிப்பதற்கும் பயன்படுத்துவதற்கும் துய்ப்பதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டியனவான துணைவிதிகளினால் ஒழுங்குபடுத்தப்படுதல் வேண்டும்.

(2) அத்துணைவிதிகளானவை, முகாமைக் கூட்டுத்தாபனத்தால் திருத்தப்படுதல் ஆகாததான அல்லது மாற்றீடு செய்யப்படுதல் ஆகாததான இச்சட்டத்துக்கான இரண்டாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள துணைவிதிகளை உள்ளடக்குதல் வேண்டும்.

(3) இச்சட்டத்துக்கான இரண்டாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள துணைவிதிகளானவை, கூட்டாட்சியாதன வரைபடமொன்று பதிவுசெய்யப்படுவதிலிருந்து துணைப்பிரிவாக்கப்பட்ட கட்டடம் ஒவ்வொன்றும் தொடர்பில் எல்லா நோக்கங்களுக்காகவும் வலுவிலிருத்தல் வேண்டும்.

(4) முகாமைக் கூட்டுத்தாபனமானது, இச்சட்டத்தினதும், எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு அமைவாக, துணைப்பிரிவாக்கப்பட்ட கட்டடங்கள் தொடர்பான கட்டுப்பாடு, முகாமை, நிருவாகம், பயன்பாடு, துய்ப்பு என்பவற்றை ஒழுங்குபடுத்துவதற்கென இச்சட்டத்துக்கான இரண்டாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள துணைவிதிகளுக்கு ஒவ்வாதனவல்லா மேலதிகத் துணைவிதிகளை விசேட தீர்மானத்தின்மூலம் ஆக்கலாம்.

(5) துணைப்பிரிவாக்கப்பட்ட கட்டடங்கள் தொடர்பில் அப்போதைக்கு வலுவிலிருப்பனவான துணைவிதிகளானவை, அவை—

(அ) முகாமைக் கூட்டுத்தாபனத்தைப் பொறுத்தவரை கூறுகள் எல்லாவற்றினதும் சொந்தக்காரர்களுடன் செய்துகொள்ளப்பட்ட; அத்துடன்

(ஆ) கூறொன்றின் சொந்தக்காரரைப் பொறுத்தவரை முகாமைக் கூட்டுத்தாபனத்துடன் செய்துகொள்ளப்பட்ட,

தகுந்த முறையில் எழுதி நிறைவேற்றப்பட்ட உடன்படிக்கையாக அமைந்திருந்தனவென்றாற்போன்ற அதே அளவுக்கு முகாமைக் கூட்டுத்தாபனத்தையும் எல்லாக் கூறுகளினதும் சொந்தக்காரர்களையும் பிணிப்பனவாதல் வேண்டும்.

(6) முகாமைக் கூட்டுத்தாபனமானது—

(அ) காலத்துக்குக்காலம் வலுவிலிருப்பனவான துணைவிதிகள் பற்றிய பதிவேடொன்றை வைத்திருத்தல் வேண்டும்;

(ஆ) கூறொன்றின் சொந்தக்காரர் ஒருவரால் அல்லது கூறொன்றின் சொந்தக்காரர் சார்பில் விண்ணப்பம் செய்வதற்கென உரியமுறையில் அதிகாரமளிக்கப்பட்டவரான ஆள் ஒருவரால் வலுவிலிருப்பனவான துணைவிதிகளின் பிரதியொன்றுக்கென எழுத்தில் செய்யப்பட்ட விண்ணப்பமொன்று பெற்றுக்கொள்ளப்படுவதன் மீது, அத்தகைய சொந்தக்காரருக்கு அல்லது உரியமுறையில் அதிகாரம் அளிக்கப்பட்ட ஆளுக்கு நியாயமான விலையில் துணைவிதிகளின் பிரதியொன்றினை வழங்குதல் வேண்டும்; அத்துடன்

(இ) அவ்வாறு விண்ணப்பம் செய்வதற்குத் தாம் தகுந்த அக்கறை உடையவராயிருந்தார் என முகாமைக் கூட்டுத்தாபனத்தைத் திருப்திப் படுத்தும் எவரேனும் ஆளினது விண்ணப்பத் தின்மீது, துணைவிதிகளைப் பார்வையிடுவதற் குக் கிடைக்கச்செய்தல் வேண்டும்.

(7) துணைவிதிகள் எவையும்—

(அ) கூறெதனதும் உறுதியளிப்பைத் தடைசெய்வன வாக அல்லது மட்டுப்படுத்துவனவாக; அல் லது

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அல்லது இச்சட்டத்தினல் வெளிப்படையாக அல்லது உட்கிடையாக உரு வாக்கப்பட்ட வசதியுரிமை எதனையும் அழிப் பனவாக அல்லது திரிபுபடுத்துவனவாக,

செயற்படும் வல்லமையுடையனவாதலாகா.

(8) முகாமைக் கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்பட்ட ஒவ்வொரு துணைவிதியினதும், அத்துடன் அப் போதைக்கு வலுவிலிருப்பதான துணைவிதி எதனதும் திரிபுபடுத்துகை அல்லது திருத்தம் ஒவ்வொன்றினதும், முகாமைக் கூட்டுத்தாபனத்தின் இலச்சினையின்கீழ் உண்மைப் பிரதியொன்றெனச் சான்றுபடுத்தப்பட்ட பிரதியொன்று முகாமைக் கூட்டுத்தாபனத்தால் பொது வசதிகள் சபையிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(9) முகாமைக் கூட்டுத்தாபனமானது, அல்லது கூறென்றின் எவரேனும் சொந்தக்காரரானவர்—

(அ) ஏதேனும் துணைவிதிக்கு இணங்கியொழுகு வதற்குப் பிணிக்கப்பட்டவரான எவரேனும் ஆளினல் அத்துணைவிதி புரியப்படுதலை வலு வுக்கிடுவதற்கான அல்லது அதன் மீறுகை தடுக்கப்படுவதற்கான கட்டளையொன்றுக் கென; அல்லது

(ஆ) ஏதேனும் துணைவிதிக்கு இணங்கியொழுகு வதற்குப் பிணிக்கப்பட்டவரான எவரேனும் ஆளிடமிருந்து, அதன் மீறுகையிலிருந்து எழுவதான, ஏதேனும் ஆளுக்கு அல்லது ஆத னத்துக்கு நேர்ந்த ஏதேனும் இழப்புக்கான அல்லது ஊறுக்கான சேதஈடுகளை அறவிடு வதற்கென,

நீதிமன்றத்துக்கு விண்ணப்பிப்பதற்கு உரித்துடையவ ராதல் அல்லது உரித்துடையதாதல் வேண்டுமென்ப துடன், நீதிமன்றமானது அது பொருத்தமானதென எண்ணும் அத்தகைய கட்டளையை எவரேனும் அத்த

கைய ஆளுக்கு, முகாமைக் கூட்டுத்தாபனத்துக்கு அல்லது அதன் பேரவையின் உறுப்பினர்களுக்கு அல்லது நிருவாகிக்கு எதிராக ஆக்கலாம்.

(10) இச்சட்டத்துக்கான இரண்டாம் அட்டவணையிலுள்ள துணைவிதிகள் எவற்றினதும் மீறுகையைப் புரியும், அல்லது சொல்லப்பட்ட துணைவிதிகளின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதில் தவறுகைசெய்யும், கூறொன்றின் சொந்தக்காரர் அல்லது இருப்பாட்சியாளர் ஒவ்வொருவரும், அத்துடன் அந்த மீறுகையில் அல்லது தவறுகையில் தெரிந்துகொண்டு திறத்தவரொருவராக இருக்கும் கூறொன்றின் சொந்தக்காரர் ஒவ்வொருவரும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

முகாமை நிதியங்களைத் தாபித்தல்.

20ஏ. (1) முகாமைக் கூட்டுத்தாபனத்தின் அபிப்பிராயத்தில், பொது அமிசங்களைக் கட்டுப்படுத்துதல், முகாமை செய்தல், நிருவகித்தல் என்பனவும் வாடகை செலுத்துதல், காப்புறுதி வீதங்களையும் கட்டுப்பணங்களையும் செலுத்துதல், அத்துடன் முகாமைக் கூட்டுத்தாபனத்தின் வேறு ஏதேனும் கடப்பாட்டை நிறைவேற்றுதல் என்பனவுமான நோக்கங்களுக்குப் போதுமான நிருவாகச் செலவுகளுக்கென (இதனகத்துப் பின்னர் "முகாமை நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படுவதான) நிதியமொன்றைத் தாபித்தல் வேண்டும்.

(2) முகாமைக் கூட்டுத்தாபனமானது ஏகமனதான தீர்மானம்மூலம் அது பொருத்தமானதெனக் கருதும் வாறாக, முகாமைநிதியத்திலுள்ள எவையேனும் பணங்களை முதலீடுசெய்யலாம்; ஆயின், வங்கியொன்றுடனான நிலையான வைப்புக்கணக்கொன்றில் முதலீடு செய்வதற்கு ஏகமனதான தீர்மானமொன்று தேவைப்படுதலாகாது.

(3) முகாமை நிதியத்தைத் தாபித்துப் பேணும் நோக்கத்துக்காக, முகாமைக்கூட்டுத்தாபனமானது பொதுக்கூட்டம் ஒன்றில்—

(அ) ஓராம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களுக்கெனத் திரட்டப்படவேண்டிய பணத்தொகைகளைக் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கலாம்;

(ஆ) அவரவரது கூறுகளில் பங்குக்கூறுகளுக்கான விகிதாசாரத்தில் எல்லாக் கூறுகளினதும் சொந்தக்காரர்களிடமிருந்து உதவுதொகைகளை விதித்தறவிடுவதன்மூலம் அவ்வாறு தீர்மானிக்கப்பட்ட பணத்தொகைகளைத் திரட்டலாம்; அத்துடன்

(இ) காலம்பிந்திய உதவுதொகைகள் தொடர்பில் கூறொன்றின் சொந்தக்காரரால் செலுத்தப்படற்பாலதான வட்டித்தொகையினைத் தீர்மானிக்கலாம்.

(4) கூறொன்றின் சொந்தக்காரரான ஆளொருவரால் அல்லது அவர் சார்பில், அல்லது விற்பனைக்குக் கொடை முனையப்பட்ட கூறொன்றின் உத்தேசக் கொள்வனவுகாரரினால் அல்லது அவர் சார்பில் அல்லது கூறொன்றின் ஈடு வைப்பவரால் அல்லது அவர் சார்பில் அல்லது உத்தேச ஈடு பெறுநரால் அல்லது அவர் சார்பில் விண்ணப்பம் செய்யப்படுவதன்மீது முகாமைக் கூட்டுத்தாபனமானது, அந்த ஆளுக்கு—

(அ) அச்சொந்தக்காரரின் உதவுதொகைகளென (3) ஆம் உட்பிரிவைப் பின்பற்றித் தீர்மானிக்கப்பட்ட பணத்தொகையினையும்;

(ஆ) அந்த உட்பிரிவைப் பின்பற்றி அதனால் தீர்மானிக்கப்பட்ட பணத்தொகையின் கொடுப்பனவு நேரத்தையும் முறையையும்;

(இ) உதவுதொகை எந்த அளவுக்கு (ஏதேனும் இருப்பின்) செலுத்தப்பட்டுள்ளது என்பதையும்;

(ஈ) பிரிவு 20இ என்பதன் (5) ஆம் உட்பிரிவைப் பின்பற்றி, அக்கூறு தொடர்பில் முகாமைக் கூட்டுத்தாபனத்தால் அப்போது அறவிடப்படற்பாலதான பணத்தொகை, ஏதேனும் இருப்பின், அதனையும்;

(உ) ஓராம் உட்பிரிவைப் பின்பற்றி முகாமைக் கூட்டுத்தாபனத்தால் வைத்துப் பேணப்படும் நிதியத்தின் அல்லது நிதியங்களின் வரவிலிருக்கும் பணத்தொகையினை அல்லது முறையே பணத்தொகைகளையும் அத்துடன், அந்த நிதியத்திலிருந்து அல்லது அந்நிதியங்களிலிருந்து முகாமைக் கூட்டுத்தாபனத்தால் ஏலவே உறப்பட்டனவான எவையேனும் செலவுகளுக்கெனப் பாரப்படுத்தப்பட்டுள்ள அல்லது குறித்துவைக்கப்பட்டுள்ளனவான பணத்தொகையினை அல்லது முறையே பணத்தொகைகளையும்;

(ஊ) இச்சட்டத்தில் ஏற்பாடெதன்கீழும் கூறொன்றின் சொந்தக்காரர் அது அல்லது அவை தொடர்பில் பொறுப்பு உறுதல் சாத்தியமானதான ஏதேனும் செலவினத்தைக் கூட்டுத்தாபனம் உற்றுள்ளதா அல்லவா என்பதையும், அல்லது எவையேனும் திருத்தங்களை, வேலையை அல்லது செயலைப் புரிந்துள்ளதா

அல்லது புரியவுள்ளதா அல்லவா என்பதையும், அவ்வாறெனில், அச்செலவினத்தின் மதிப்பீட்டுத் தொகையையும் அல்லது திருத்தங்கள், வேலை அல்லது செயலின் பொதுவான தன்மையையும்,

சான்றுபடுத்துவதான சான்றிதழொன்றை வழங்குதல் வேண்டுமென்பதுடன், முகாமைக் கூட்டுத்தாபனத்துக்கு எதிர்மறையாகவும், அத்தகைய சான்றிதழ்மீது நன்னோக்குடன் தங்கிநிற்கும் (உறுப்பினர் உட்பட்ட) எவரேனும் ஆளுக்குச் சாதகமாகவும், அச்சான்றிதழானது அதன்கண் சான்றுபடுத்தப்பட்ட விடயங்களுக்கு முடிவான சான்றாதல் வேண்டும்.

(5) கூறொன்று தொடர்பில் (3) ஆம் உட்பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட உதவுதொகை எதுவும் முகாமைக் கூட்டுத்தாபனத்தால் அப்பயன்பட தீர்மானமொன்று நிறைவேற்றப்படுவதன்மீதும், அத்தீர்மானத்தின் நியதிகளுக்கு இணங்கவும், செல்மதியானதாகவும் செலுத்தப்படற்பாலதாகவும் இருத்தல் வேண்டும் என்பதுடன், குடியியல் தனிசொன்றாகக் கூறொன்றின் சொந்தக்காரரிடமிருந்து அல்லது கூறுக்கு உரித்துவழி அடுத்துறுபவரிடமிருந்து அறவிடவும்படலாம்.

(6) உட்பிரிவு (5) இன் நோக்கங்களுக்காக, "கூறொன்றின் சொந்தக்காரர்" என்பது, முகவராகவேனுஞ்சரி நம்பிக்கைப் பொறுப்பாளராகவேனுஞ்சரி பெறுநராகவேனுஞ்சரி அக்கூறின் வாடகையினை அப்போதைக்குப் பெறுபவரான ஆளையும், அக்கூறு வாடகைக் குடியிருப்பாளரொருவருக்கு வாடகைக்கு விடப்பட்டிருப்பின் அதனைப் பெறுபவரான ஆளையும் உள்ளடக்கும்.

உதவுதொகைகளை அறவிடுதல்.

20ஐ. (1) (அ) கூறொன்று தொடர்பில் 20எ என்னும் பிரிவில் (3) ஆம் உட்பிரிவின் கீழ் எவையேனும் உதவுதொகைகள் விதிக்கப்பட்டிருந்து; அல்லது

(ஆ) கூறொன்று தொடர்பில் 20இ என்னும் பிரிவின் (5) ஆம் உட்பிரிவைப் பின்பற்றி முகாமைக் கூட்டுத்தாபனத்தால் ஏதேனும் பணத்தொகை அறவிடப்படற்பாலதாகவிருந்து,

அத்துடன், அவ்வுதவுதொகைக்காக அல்லது தொகைக்காக முகாமைக் கூட்டுத்தாபனம் எழுத்திலான கோரிக்கையொன்றை அனுப்பிவைத்திருந்து, பதினான்கு நாட் காலப்பகுதியொன்று முடிவடைவதன் மீது அத்தகைய உதவுதொகை அல்லது தொகை

செலுத்தப்படாதிருக்குமிடத்து, அவ்வுதவுதொகை அல்லது தொகை, அதன் மீதான வட்டி ஏதேனும் இருப்பின், அது உட்பட, அக்கூறின்மீது முகாமைக் கூட்டுத்தாபனத்தின் பேரிலான முதற்பொறுப்பாதல் வேண்டும்.

(2) முகாமைக் கூட்டுத்தாபனமானது, (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, அத்தகைய முகாமைக் கூட்டுத்தாபனம், பதிவுசெய்யப்பட்ட ஒரு ஈடுபெறுநராக இருந்தாற்போன்று விற்பனை செய்தற்கான தத்துவத்தையும் அது தொடர்பான அல்லது அதற்கு இடைநேர்விளைவான வேறு எல்லாத் தத்துவங்களையும் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், செல்மதியாக உள்ள உதவுதொகை அளவானது (அதன் மீதான ஏதேனும் வட்டியும் உட்பட) அக்கூறின்மீது ஏதேனும் அரசாங்க அல்லது நியதிச் சட்டமுறை அதிகாரசபைக்குள்ள எல்லா நியதிச்சட்டமுறையான உரிமைகளுக்கும், தாக்கீடுகளுக்கும், அத்துடன் சொல்லப்பட்ட தாக்கீடு பற்றிய சாதனம், சமர்ப்பிக்கப்பட்ட தேதிக்கு முன்னர் பதிவுசெய்யப்பட்ட அல்லது அறிவிக்கப்பட்ட எல்லாப் பாரபந்தங்களுக்கும் அமைவாக இருத்தலும் வேண்டும்.

(3) முகாமைக் கூட்டுத்தாபனமானது—

(அ) கூறினை விற்றுக்கொள்வதற்கென முகாமைக் கூட்டுத்தாபனத்தினால் விசேட தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டிருந்தாலன்றி;

(ஆ) உத்தேச விற்பனை பற்றிய அறிவித்தலொன்று ஒரு அல்லது ஒன்றுக்கு அதிகமான நாளாந்தப் புதினத்தாளில் அல்லது புதினத்தாள்களில் வெளியிடப்பட்டிருந்தாலன்றி;

(இ) அத்தகைய வெளியீட்டுத் தேதியின் பின்னர் ஆறு கிழமைகள்கொண்ட காலப்பகுதியின் போது, அதன்மீதான வட்டி உட்படுவதாக, செல்மதியாயுள்ள உதவுதொகை அளவினதும் (ஆ) என்னும் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட வெளியீட்டுச் செலவினதும் அவசியமான இடைநேர்விளைவாம் விதிப்பனவுகளதும் கணக்கில் கொடுப்பனவு எதுவும் செய்யப்படாதிருந்தாலன்றி; அத்துடன்

(ஈ) முகாமைக் கூட்டுத்தாபனம் விற்பனையைத் தொடர்ந்துநடாத்துவதில் அதனைத் தடுப்பதான நீதிமன்றத்தில், முடிவுறு சட்ட வழக்கு எதுவும் இல்லாதிருந்தாலன்றி,

கூறினை (2) ஆம் உட்பிரிவின்கீழ் விற்பனை செய்ய முற்படுதலாகாது.

(4) மூன்றும் உட்பிரிவின் ஏற்பாடுகளைப் பின்பற்றி, தாக்கீதொன்றாக அதன் விற்பனைசெய்தற்கான தத்துவத்தைப் பிரயோகித்தல்வகையாக முகாமைக் கூட்டுத்தாபனத்தால் ஏதேனும் கூறு கைமாற்றஞ்செய்யப்பட்டு, அச்சாதனம் பதிவாளரிடம் பதிவுக்கெனச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளவிடத்து—

(அ) அந்தகைய் கைமாற்றமானது—

(i) விற்பனை செய்வதற்கான அதன் தத்துவம் பிரயோகிக்கப்படுவதற்கு அதிகாரமளிப்பதான முகாமைக் கூட்டுத்தாபனத்தின் விசேட தீர்மானத்தின், முகாமைக் கூட்டுத்தாபனத்தினது பேரவையின் இரு உறுப்பினர்கள் முன்னிலையில் முகாமைக் கூட்டுத்தாபனத்தின் இலச்சினை அதன்மீது பொறிக்கப்பட்டிருப்பதான சான்றுப்படுத்தப்பட்ட உண்மைப் பிரதியொன்றும்;

(ii) மூன்றும் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட வெளியீட்டின் அறிவித்தல்கள் ஒவ்வொன்றினதும் பிரதியொன்றும்; அத்துடன்

(iii) அவசியமான இடைநேர்வினாவாம் தன்மையதான அறவீடுகள் எல்லாமும் உட்பட, உதவுதொகையும், அதன்மீது செல்மதியான வட்டியும் செலுத்தப்பட்டிருக்கவில்லை எனவும், கூறின் விற்பனையைத் தொடர்ந்து நடாத்துவதில் முகாமைக் கூட்டுத்தாபனத்தைத் தடுப்பதான முடிவுறாச் சட்டவழக்கு எதுவும் நீதிமன்றத்தில் இல்லை எனவும், இப்பந்தியின் (1) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட முகாமைக் கூட்டுத்தாபனத்தின் பேரவை உறுப்பினர்கள் இருவர் இணைந்து கூறுவதான நியதிச் சட்ட முறையான வெளிப்படுத்துகையொன்றும்,

பதிவாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலன்றி, பதிவுசெய்வதற்கென ஏற்றுக்கொள்ளப்படுதலாகாது; அத்துடன்

(ஆ) முகாமைக் கூட்டுத்தாபனத்திடமிருந்து கூறினைக் கொள்வனவு செய்பவரோ அல்லது பதிவாளரோ, விற்பனை அல்லது கைமாற்றத்தின் ஒழுங்குமுறையாந்தன்மை அல்லது செல்லுபடியாந்தன்மை பற்றி விசாரணை செய்வதற்கு அக்கறையுடையோராதலாகாது.

(5) முகாமைக் கூட்டுத்தாபனம் தவறானமுறையில் அல்லது வேறுவகையாக இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக விற்பனைசெய்வதற்கான அதன் தத்துவத்தைப் பிரயோகித்துள்ளவிடத்து, விசேட தீர்மானம் நிறைவேற்றப்படும்போது சமூகமளித்திருந்தவர்களான அல்லது எவர் முன்னிலையில் நிறைவேற்றப்பட்ட விசேட தீர்மானத்தின் சான்றுப்படுத்தப்பட்ட உண்மைப் பிரதிக்கு முகாமைக் கூட்டுத்தாபனத்தின் இலச்சினை பொறிக்கப்பட்டு, இப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவைப் பின்பற்றி பதிவாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டதோ அன்னான முகாமைக் கூட்டுத்தாபனத்தின் பேரவையினது உறுப்பினர் ஒவ்வொருவரும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(6) அதன்மீதான எல்லா வட்டியும் உட்பட, செல்மதியான உதவுதொகையும் அத்துடன் எவையேனும் அவசியமான இடைநேர் விளைவாம் அறவீடுகளும் கொடுப்பனவு செய்யப்படுவதன்மீது, கூறானது, அத்தகைய கொடுப்பனவு பெற்றுக்கொள்ளப்படுவதன்மீது முகாமைக் கூட்டுத்தாபனத்தால் பொறுப்பு விடுவிக்கப்படுதல் வேண்டும்.

(7) கூறொன்றன் சொந்தக்காரரிடமிருந்து அல்லது கூறின் உரித்துக்கான அவரது வழியுரிமையாளரிடமிருந்து குடியியல் தனிசொன்றாக ஏதேனும் கூறு தொடர்பில் செல்லுமதியாகவுள்ள உதவுதொகை அல்லது தொகை ஆகியவற்றை அறவிடுவதில் அவசியமாக உறப்பட்டனவான எவையேனும் சட்டச் செலவுத் தொகைகள் அத்துடன் இடைநேர்விளைவான தாக்கீடுகள் உட்பட, அத்தகைய உதவுதொகையையும் அல்லது தொகையையும் அதன்மேலான எல்லா வட்டிகளையும் அறவிடுவதற்கு 20இ என்னும் பிரிவின் (5) ஆம் உட்பிரிவினால் அல்லது 20ஏ என்னும் பிரிவின் (5) ஆம், (7) ஆம் உட்பிரிவுகளினால் முகாமைக் கூட்டுத்தாபனத்திற்கு அளிக்கப்பட்ட உரிமைகள் தத்துவங்கள் என்பனவற்றிற்குப் பங்கமின்றி இப்பிரிவின் ஏற்பாடுகள் இருத்தல் வேண்டும்.

(8) இப்பிரிவில் " அரசாங்க அல்லது நியதிச்சட்டமுறையான அதிகாரசபை" என்பது, காணியினை கட்டாயமாகப் பற்றுவதற்கு, விற்பதற்கு அல்லது கொள்ளுதற்கு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட அல்லது தத்துவமளிக்கப்பட்ட எவரேனும் ஆளை, ஏதேனும் கூட்டுத்தாபனத்தை அல்லது குழுவை உள்ளடக்குதல் வேண்டும்.

முகாமைக் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களுக்குள்ள பொறுப்பு.

20ஓ. (1) முகாமைக் கூட்டுத்தாபனம் அதன் தத்துவங்களுள் அல்லது பணிகளுள் எதனையும் பிரயோகிக்கும்போது அல்லது அதன் கடமைகளை அல்லது கடப்பாடுகளை நிறைவேற்றும்போது, முகாமைக் கூட்டுத்தாபனத்தால் சட்டமுறையாக உறப்பட்டதான ஏதேனும் தொகையின் கொடுப்பனவு இப்பிரிவின் பயனுகை, அப்போதைக்கும் காலத்திற்குக் காலமும் முகாமைக் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாகவுள்ள ஆட்களால், ஒவ்வொரு கூறினதும் சொந்தக்காரராக அல்லது சொந்தக்காரர்களாக உள்ள உறுப்பினர் அல்லது உறுப்பினர்கள், எல்லாக் கூறுகளினதும் கூட்டுமொத்தமான பங்குக் கூறுகளுக்கு அந்தக் கூறின் பங்குக்கூறு, என்ன விகிதாசாரத்தைக் கொண்டுள்ளதோ அதே விகிதாசாரத்தில் அவ்வாறு உறப்பட்டதான பணத்தின் அத்தகைய விகிதாசாரத்திற்கு மட்டுமே அத்தகைய உத்தரவாதத்தின் கீழ் பொறுப்புடையவராகவிருப்பதாக உத்தரவாதமளிக்கப்படுதல் வேண்டும்.

(2) (அ) ஓராம் உட்பிரிவின் கீழ் முகாமைக் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் ஒருவருக்குள்ள அல்லது முன்னைய உறுப்பினரொருவருக்குள்ள ஏதேனும் பொறுப்பின் காரணமாக, அந்த உறுப்பினர் அல்லது முன்னைய உறுப்பினர், ஏதேனும் கருமம் தொடர்பாக, செலுத்துவதற்கு கடப்பாடுடையவராகவிருந்து 20ஏ என்னும் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் அந்தக் கருமம் தொடர்பாக அவர் பொறுப்பாக உள்ளதான விகிதாசாரத்திற்கு அதிகமாக செலுத்தியுள்ளவிடத்து ; அத்துடன்

(ஆ) முகாமைக் கூட்டுத்தாபனத்தின் வேறு எவரேனும் உறுப்பினர் அல்லது உறுப்பினர்கள், அதே கருமம் தொடர்பாக அந்த உட்பிரிவின் கீழ் அவரின் அல்லது அவர்களின் பொறுப்பை நிறைவேற்றாதவிடத்து அல்லது முற்றாக நிறைவேற்றாதவிடத்து,

இந்த உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட உறுப்பினர் அல்லது முன்னைய உறுப்பினர், அக் கருமம் தொடர்பாக அவரால் செலுத்தப்பட்ட கூட்டுமொத்தத் தொகையானது, 20ஏ என்னும் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் அக் கருமம் தொடர்பாக அவர் செலுத்துவதற்குப் பொறுப்புடையவராக இருக்கும் விகிதாசாரமான தொகையை எவ்வளவால் விஞ்சுகின்றதோ அவ்வளவு தொகைக்கு மேற்படாத ஒரு தொகையை இவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தி

யில் குறிப்பீடு செய்யப்பட்ட உறுப்பினரிடமிருந்து அல்லது உறுப்பினர்களிடமிருந்து அவருக்குப் போகுமதியாக உள்ள ஒரு தனிசு என்றுற்போன்று தகுதி வாய்ந்த நியாயாதிக்கம்கொண்ட ஏதேனும் நீதிமன்றத்தில் அந்த உறுப்பினரிடமிருந்து அல்லது அந்த உறுப்பினர்களிடமிருந்து அறவிடுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும், ஆனல் இவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்படும் உறுப்பினர் எவரும், 20 ஏ என்னும் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் அக்கருமம் தொடர்பாக அவரது பொறுப்பில் கொடுத்துத் தீர்க்கப்படாது எஞ்சியிருக்கும் தொகையிலும்பார்க்கக் கூடுதலாக இவ்வுட்பிரிவின்கீழ் செலுத்துதற்காளானவராதலாகாது.

தமது ஆதனத்தினைக் கட்டுப்படுத்த இயலாதவரான சொந்தக்காரர்களுக்குள்ள வாக்களிப்பதற்கான தத்துவங்கள்.

20ஔ. (1) கூறொன்றின் சொந்தக்காரரானவர் ஏதேனும் காரணத்திற்காக அவரின் ஆதனத்தைக் கட்டுப்படுத்த இயலாதவராக இருக்குமிடத்து, இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையினுல் அவருக்கு அளிக்கப்பட்ட வாக்களிப்பதற்கான தத்துவங்கள், அந்த ஆதனத்தைக் கட்டுப்படுத்துவதற்கு, சட்டத்தினுல் அப்போதைக்கு அதிகாரம் வழங்கப்பட்டவரான ஆளினுல் பிரயோகிக்கப்படற்பாலனவாதல் வேண்டும்.

(2) சொந்தக்காரரின் அக்கறையானது ஒன்ருே, பலவோவாய பதிவுசெய்யப்பட்ட ஈடுகளுக்கு அமைந்ததாக இருக்குமிடத்து, இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையினுல் அவருக்கு அளிக்கப்பட்ட வாக்களிப்புத் தத்துவங்கள்—

(அ) ஏகமனதான தீர்மானம் ஒன்று தேவைப்படும் ஏதேனும் விடயத்தில், முந்துரிமை அடிப்படையில் முதல் உரித்துப்பெற்றவரான ஈடுபெறுநர் பொதுக்கூட்டத்திற்கு முன்னர் எந்நேரத்திலாயினும் சொல்லப்பட்ட வாக்களிப்புத் தத்துவங்களைப் பிரயோகிக்க முன்னவில்லை என முகாமைக் கூட்டுத்தாபனத்திற்கு எழுத்தில் அறிவித்தல் கொடுத்திருந்தாலன்றி, அத்தகைய ஈடுபெறுநரினுல் நேரில் அல்லது பதிலிமூலம் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) வேறேதேனும் விடயத்தில், முந்துரிமை அடிப்படையில் முதல் உரித்துப் பெற்றவரான ஈடுபெறுபவர் பொதுக்கூட்டத்திற்கு முன்னர் எந்நேரத்திலாயினும் சொல்லப்பட்ட வாக்களிப்புத் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கான அவரது முன்னம் பற்றிய எழுத்திலான அறிவித்தலை முகாமைக் கூட்டுத்தாபனத்திற்குக் கொடுத்திருந்தாலன்றி, சொந்தக்காரரினுல் பிரயோகிக்கப்படலாம். அத்தகைய சந்தருப்பத்தில் வாக்களிப்பதற்கான தத்துவங்

கள், ஈடுபெறுநர் பொதுக்கூட்டத்தில் நேரில் சமூகமளித்திருக்கும்போது ஈடுபெறுநரால் அல்லது பதிலிமூலம் பிரயோகிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், ஈடுபெறுநர் அல்லது அவர் பதிலி, பொதுக்கூட்டத்தில் சமூகமளிக்காதபோது, வாக்களிப்பதற்கான தத்துவங்கள், (இ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, சொந்தக்காரரால் பிரயோகிக்கப்படலாம்;

(இ) முந்துரிமை அடிப்படையில் முதல் உரித்துப் பெற்றவரான ஈடுபெறுநர் வாக்களிப்பதற்கு அவருக்குள்ள தத்துவங்களைப் பிரயோகிக்க விரும்பாததான ஏதேனும் விடயத்தில், முந்துரிமை அடிப்படையில் அடுத்து உரித்துப் பெற்றவரான பதிவுசெய்யப்பட்ட ஈடுபெறுநர் அல்லது அவரது பதிலி, முந்துரிமை அடிப்படையில் முதல் உரித்துப்பெற்றவரான ஈடுபெறுநருக்கு வழங்கப்பட்ட வாக்களிப்புத் தத்துவங்களைப் பிரயோகிக்கலாம் என்பதுடன், முந்துரிமை அடிப்படையில் அடுத்து உரித்துப்பெற்றவரான பதிவுசெய்யப்பட்ட ஈடுபெறுநர் அல்லது அவரது பதிலி சொல்லப்பட்ட பொதுக்கூட்டத்தில் சமூகமளிக்காத போது அத்தகைய வாக்களிப்புத் தத்துவங்கள் சொந்தக்காரரினால் பிரயோகிக்கவும்படலாம்.

(3) பதிவுசெய்யப்பட்ட ஈடுபெறுநர் ஒருவர், அவருக்குரிய அக்கறையினை முகாமைக் கூட்டுத்தாபனத்திற்கு அறிவித்திருந்தாலன்றி, (2) ஆம் உட்பிரிவினால் வழங்கப்பட்ட அவருக்குரிய வாக்களிப்பதற்கான தத்துவங்களைப் பிரயோகித்தற்குரித்துடையவராதல் ஆகாது.

குறித்த சில விடயங்களில் வாக்களிக்கும் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்குப் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளரை நியமிப்பதற்கு நீதிமன்றத்திற்குள்ள தத்துவம்.

20க. முகாமைக் கூட்டுத்தாபனத்தின் அல்லது கூறொன்றின் சொந்தக்காரரின் விண்ணப்பத்தின்மேல், கூறொன்றன் தொடர்பாக வாக்களிப்பதற்கு இயலும் ஆள் அல்லது ஆட்கள் குழு எவரும் அல்லது எதுவும் இல்லை, என நீதிமன்றம் திருப்திப்படுமிடத்து, இச்சட்டத்தின்கீழ் கூறினைச் சார்ந்த வாக்களிப்பதற்கான தத்துவங்களுள் நீதிமன்றம் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய தத்துவங்களைப் பிரயோகிக்கும் நோக்கங்களுக்காக, நீதிமன்றமானது—

(அ) இச்சட்டத்தினால் ஏகமனதான தீர்மானமொன்று தேவைப்படுத்தப்படும் விடயங்களில், பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளரை அல்லது வேறு எவரேனும் பொருத்தமானவரும் தகுந்தவருமான ஆளை அல்லது ஆட்கள் குழுவை நியமித்தல் வேண்டும்; அத்துடன்

(இ) வேறு ஏதேனும் விடயத்தில் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளரை அல்லது வேறு எவரேனும் பொருத்தமானவரும் தகுந்தவருமான ஆளை அல்லது ஆட்கள் குழுவை நியமிக்கலாம்.

அறிவித்தலையும் ஆவணங்களையும் சேர்ப்பித்தல்.

20ஙு. (1) முகாமைக் கூட்டுத்தாபனமானது, கூட்டாட்சியாதனத்தின்முன் கட்டட வரிசையில் அல்லது அதற்கு அருகாமையில்—

(அ) முகாமைக் கூட்டுத்தாபனத்தின் பெயரையும், பதிவுசெய்யப்பட்ட கூட்டாட்சியாதன வரைபடத்தில் காட்டப்பட்ட ஆவணங்களைச் சேர்ப்பிப்பதற்கான முகவரிகளையும் காட்டும் அறிவித்தல் ஒன்றினைத் தொடர்ந்து வெளிக்காட்டி வைக்குமாறு செய்வித்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) பதிவுசெய்யப்பட்ட கூட்டாட்சியாதன வரைபடத்தில் காட்டப்பட்ட ஆவணங்களைச் சேர்ப்பிப்பதற்கான முகவரியானது, கூட்டாட்சி ஆதனத்தினுள் கட்டியமைக்கப்பட்ட கட்டடத்தின் அஞ்சல் முகவரியாக இருக்குமிடத்து, அஞ்சல் ஒப்படை செய்யும் நோக்கத்துக்குப் பொருத்தமான கொள்கலன் ஒன்றினை, அதன் மீது முகாமைக் கூட்டுத்தாபனத்தின் பெயர் தெளிவாகக் காட்டப்பட்டதாய், தொடர்ந்தும் இருக்கக்கூடியவாறு செய்வித்தல் வேண்டும்.

(2) ஆவணங்களைச் சேர்ப்பிப்பதற்கான முகவரி மாற்றப்படுமிடத்து, முகாமைக் கூட்டுத்தாபனமானது, பதிவாளருக்கும் பொது வசதிகள் சபைக்கும் மாற்றம் பற்றி உடனடியாக அறிவித்தல்செய்தல் வேண்டும் என்பதுடன், பதிவாளர் பதிவுசெய்யப்பட்ட கூட்டாட்சியாதன வரைபடத்தினை அதற்கிணங்கத் திருத்தம் செய்தலும் வேண்டும்.

(3) பதிவு செய்யப்பட்ட கூட்டாட்சியாதன வரைபடத்தில் அல்லது அதற்கான ஏதேனும் திருத்தத்தில் காட்டப்பட்ட முகவரியின்படி முகாமைக் கூட்டுத்தாபனத்திற்கு முகவரியிட்டு எழுதி, பதிவஞ்சல் அனுப்புவதன்மூலம், ஆவணம் ஒன்று முகாமைக் கூட்டுத்தாபனத்திற்குச் சேர்ப்பிக்கப்படலாம்.

(4) முகாமைக் கூட்டுத்தாபனத்தின் கடைசியாகப் பதியப்பட்டதான முகவரிக்கு பதிவஞ்சலில் அனுப்பி வைக்கப்பட்ட ஏதேனும் அறிவித்தல், அஞ்சல் அலுவலகம் மூலம் கடிதம் ஒன்று ஒப்படைக்கப்படாது திருப்பி அனுப்பிவைக்கப்பட்டது என்ற நிகழ்வு எப்படியிருப்பினும், அஞ்சலின் சாதாரண போக்கில் அக்

கடிதம் எந்த நேரத்தில் ஒப்படைக்கப்படக்கூடுமோ அந்த நேரத்தில் முகாமைக் கூட்டுத்தாபனத்திடம் உரியமுறையில் சேர்ப்பிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, "ஆவணம்" என்பது அழைப்புக்கட்டளைகள், அறிவித்தல்கள், கட்டளை மற்றும் வேறு சட்டமன்றாணைகளையும் உள்ளடக்கும்.

துணைப்பிரிவாக்கப்பட்ட கட்டிடம் சேதப்படுத்தப்படும் போது உள்ள நடவடிக்கை முறை.

20ஞ. கூட்டாட்சியாதன வரைபடமொன்றில் காட்டப்பட்ட துணைப்பிரிவாக்கப்பட்டதான கட்டிடம் ஒன்று சேதப்படுத்தப்பட்டு, ஆனால் முற்றாக அழிக்கப்படாத விடத்து முகாமைக் கூட்டுத்தாபனமானது பின்வரும் முந்துரிமைகளில்—

(அ) துணைப்பிரிவாக்கப்பட்ட கட்டிடத்தின் சேதப்படுத்தப்பட்ட பாகத்தினை மீளக்கட்டியமைத்து, துணைப்பிரிவாக்கப்பட்ட கட்டிடத்தினை முழுமையாக அல்லது பகுதியளவில் தொடர்ந்து பயன்படுத்துவதற்குத் திட்டமொன்றினை ஏற்பாடுசெய்தல் வேண்டும்;

(ஆ) துணைப்பிரிவாக்கப்பட்ட கட்டிடத்திற்கு ஏற்பட்ட சேதம் தொடர்பாக முகாமைக் கூட்டுத்தாபனத்தால் பெற்றுக்கொள்ளப்பட்ட காப்புறுதிப் பணங்களை, (அ) என்னும் பந்தியில் குறிப்பிடுசெய்யப்பட்ட துணைப்பிரிவாக்கப்பட்ட கட்டிடத்தினை மீளக் கட்டியமைத்தல், தொடர்ந்து பயன்படுத்தல் ஆகிய திட்டங்களுக்குச் செலவுசெய்தல் வேண்டும்;

(இ) முகாமைக் கூட்டுத்தாபனத்தால் பெற்றுக்கொள்ளப்பட்ட காப்புறுதிப் பணங்களைக் கூறுகளின் சொந்தக்காரர்களுக்கு அல்லது தமது கூறுகள் சேதப்படுத்தப்பட்டவர்களான அல்லது அழிக்கப்பட்டவர்களான சொந்தக்காரர்களில் சிலருக்கு அல்லது ஒருவருக்கு அல்லது அவர்களில் ஒன்றுக்கு அதிகமானவர்க்கு செலுத்தும்படி பணித்தல் வேண்டும்.

துணைப்பிரிவாக்கப்பட்ட கட்டிடங்கள் அழிக்கப்படுதல்.

20ட. (1) எல்லாக் கூறுகளினதும் சொந்தக்காரர்கள் துணைப்பிரிவாக்கப்பட்ட கட்டிடம் அழிக்கப்பட வேண்டும் என ஏகமனதாக தீர்மானம் மூலம் தீர்மானிக்கும்போது இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, கூட்டாட்சியாதன வரைபடமொன்றில் காண்பிக்கப்பட்ட துணைப்பிரிவாக்கப்பட்ட கட்டிடம் ஒன்று, அழிந்ததாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) துணைப்பிரிவாக்கப்பட்ட கட்டிடம் அழிக்கப் பட்டதன்மேல், முகாமைக் கூட்டுத்தாபனமானது, அக் கட்டிடம் அழிக்கப்பட்டமை பற்றிய அறிவித்தல் ஒன் றினை உடனடியாகப் பதிவாளரிடம் கொடுத்தல் வேண் டும்.

(3) பதிவாளரானவர், அந்த அறிவித்தலைப் பெற்றுக் கொண்டதன்மேல், துணைப்பிரிவாக்கப்பட்ட கட்டிடம் அழிக்கப்பட்டமை பற்றிய அறிவிப்பு ஒன்றினையும், பொதுவான வாடகைக் குடியிருப்பாளர்களாக சொந் தக்காரருக்கு கூட்டாட்சி ஆதனம் உரித்தாக்கப்பட் டமை பற்றிய நிருபக்குறிப்பு ஒன்றினையும் பதிவுசெய் யப்பட்ட கூட்டாட்சியாதன வரைபடத்திலும் கூட் டாட்சி ஆதனத்தினை உள்ளடக்கியுள்ள காணி இடாப் பின் தொகுதியிலும் இருமடித்தாளிலும் பதிதல் வேண் டும்.

(4) அந்த நிருபக்குறிப்பினைப் பதிந்ததன் மேல்—

(அ) சொந்தக்காரர் ஒவ்வொருவரும், கூறின் சொந் தக்காரராக இல்லாது ஒழிவதுடன், தமது பங் குக் கூறுகளுக்கான விகிதாசாரப்படி மற்றச் சொந்தக்காரர்களுடன் பொதுவான வாட கைக் குடியிருப்பாளர் ஒருவராகவும் அத்து டன், அவரின் கூறு தொடர்பாக அவரால் வைத்துக்கொள்ளப்படும் அதே நியதிகளுக் கும் பயன்பாட்டுக் காலப்பகுதிக்கும் கூட் டாட்சி ஆதனத்திற்கு உரித்துடையவராதல் வேண்டும்;

(ஆ) அவரின் கூறுக்கு எதிராகப் பதிவுசெய்யப் பட்ட உளதாகும் பாரபந்தம் எதுவும், கூட் டாட்சி ஆதனத்தினைக்கொண்டுள்ள காணியில் அவருக்குள்ள பங்கின்மேலான ஒரு பாரபந்த மாக இருத்தல் வேண்டும்: அத்துடன், அந்தக் காணியினை உள்ளடக்கும் காணி இடாப்பின் தொகுதியிலும் இருமடித்தாளிலும் பதியப் பட்ட பாரபந்தம் பற்றிய நிருபக்குறிப்பு அல்லது அறிவிப்பு ஒன்று, அவரின் கூறுக்கு எதிராக அந்த பாரபந்தத்தினை பதிவுசெய்த தேதிபோன்ற அதே தேதியினைக் கொண்டிருத் தல் வேண்டும்; அத்துடன்

(இ) இச்சட்டத்தின் கீழ் உட்கிடையாகக் கருதப் படும் எல்லா நியதிச்சட்ட முறையான வசதி யுரிமைகளும், கூட்டாட்சி ஆதனத்தினை அல் லது அதன் ஏதேனும் பாகத்தினைக் கொண் டுள்ள காணியினைப் பாதிக்காதொழிதல் வேண் டும்.

(5) முன்னைய சொந்தக்காரர்கள், ஏகமனதான தீர்மானத்தினால் கூட்டாட்சி ஆதனத்தினை அல்லது அதன் ஏதேனும் பாகத்தினைக் கைமாற்றுமாறு முகாமைக் கூட்டுத்தாபனத்தினைப் பணிக்கலாம்.

(6) முகாமைக் கூட்டுத்தாபனமானது, தீர்மானமானது உரிய முறையில் நிறைவேற்றப்பட்டதெனவும் கூட்டாட்சி ஆதனத்தில் பதிவுசெய்யப்பட்ட அக்கறைகளைக் கொண்டுள்ளவர்களான எல்லா ஆட்களும் கைமாற்றப்பட முன்னப்பட்டுள்ள கூட்டாட்சி ஆதனத்தை அல்லது அதன் ஏதேனும் பாகத்தைக் கொண்டுள்ளதான காணியில் முறையே அவர்களுக்கு உள்ளனவான அக்கறைகளை விடுவிப்பதற்கு எழுத்தில் சம்மதமளித்துள்ளார் எனவும் திருப்திப்பட்டால், தோதான கைமாற்றலை எழுதி நிறைவேற்றுதல் வேண்டும் என்பதுடன், கைமாற்றமானது, கூட்டாட்சி ஆதனத்தில் பதிவுசெய்யப்பட்ட அக்கறை ஒன்றினைக் கொண்டிருப்பவரான எவரேனும் ஆளினாலான எழுதி நிறைவேற்றுதலின்றியே செல்லுபடியானதாகவும் பயனுள்ளதாகவும் இருத்தல் வேண்டும்; அத்துடன், கைமாற்றத்தின் கீழ் முகாமைக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தற்பாலதாக உள்ளனவான பணங்கள் எவற்றிற்குமான முகாமைக் கூட்டுத்தாபனத்தின் பற்றுச்சீட்டினது போதுமான பொறுப்பு விடுவிப்பு ஒன்றாதல் வேண்டும்; அத்துடன், கைமாற்றத்தின் கீழ் ஏற்றுக்கொள்பவரான ஆளை பிரயோகத்தினைக் கவனிப்பதினின்று அல்லது அவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்டதாகச் சொல்லப்பட்ட பணங்களின் இழப்புக்கு அல்லது தவறான பிரயோகத்திற்கு விளக்கம் தருவதிலிருந்து விடுவிப்பதாதல் வேண்டும்.

(7) தீர்மானமானது உரியமுறையில் நிறைவேற்றப்பட்டதெனவும் அவசியமான எல்லாரது சம்மதமும் தரப்பட்டதெனவும் முகாமைக் கூட்டுத்தாபனத்தின் இலச்சினையின் கீழான சான்றிதழொன்று இணைக்கப்பட்டிருந்தாலன்றி, இறுதியாக முற்போந்ததான உட்பிரிவினைப் பின்பற்றி முகாமைக்கூட்டுத்தாபனத்தால் எழுதி நிறைவேற்றப்பட்டதான கைமாற்றல் ஒன்று, பதிவுசெய்வதற்கென ஏற்றுக்கொள்ளப்படுதலாகாது என்பதுடன், அத்தகைய சான்றிதழ் ஒன்று கூட்டாட்சி ஆதனத்தினைக் கொள்வனை செய்தவர் ஒருவர் சார்பாகவும் பதிவாளர் சார்பாகவும், அதன்கண் சொல்லப்பட்டதான நிகழ்வுகள் பற்றிய முற்றான சான்றாக இருத்தலும் வேண்டும்.

(8) துணைப்பிரிவர்க்கப்பட்ட கட்டிடம் அழிக்கப்பட்டமை பற்றிய அறிவித்தல் ஒன்று பதிவாளரிடம் கொடுக்கப்பட்டதன் பின்னர், காணி அல்லது அதன்

ஏதேனும் பாகம் முன்னைய சொந்தக்காரர் ஒருவரால் அல்லது முகாமைக்கூட்டுத்தாபனத்தால் கைமாற்றப் படும்போது—

(அ) முன்னைய சொந்தக்காரரானவர், அவர் கைமாற்றம் செய்கிறாராயின், அவரின் கூறு தொடர்பான அவரது உரித்து உறுதிகளைப் பதிவாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்;

(ஆ) முகாமைக்கூட்டுத்தாபனமானது, முன்னைய சொந்தக்காரர்கள் எல்லாரினதும் சார்பில் கைமாற்றம் செய்கின்றதாயின், முன்னைய சொந்தக்காரர்கள் எல்லாரினதும் சார்பில் அவர்களது உரித்து உறுதிகளைப் பதிவாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்; அத்துடன்

(இ) பதிவாளர், விடயத்திற்கு ஏற்ப, கூறு அல்லது கூறுகள் தொடர்பான உரித்து உறுதிகளைப் பெற்றுக்கொண்டதன்மேல், கூட்டாட்சி ஆதனத்தின் துணைஇடாப்பினது இயைபான இருமடித்தாழ்களை நீக்கஞ்செய்தல் வேண்டும், அத்துடன் அதன் பின்னர் கைமாற்றம் பெற்றவர், ஆவணப்பதிவுக் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க காணியினைக் கையாளுதல் வேண்டும்.

(9) இப்பிரிவின்கீழ் துணைப்பிரிவாக்கப்பட்டமை முடிவுறுத்தப்பட்டிருப்பினும்கூட கூட்டாட்சி ஆதனத்தின் துணைஇடாப்பின் இயைபான பதிவானது, முகாமைக்கூட்டுத்தாபனம் தொடர்ந்திருக்கும்வரையில் துணைப்பிரிவாக்கத்தில் முடிவுறுத்தப்படுவதற்கு முன்னர் துணைப்பிரிவாக்கத்தில் தொடர்பான கருமங்களின் ஒரு பதிவான சான்றாகப் பயன்படுத்தப்படலாம்.

(10) இப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவினைப் பின்பற்றி கூட்டாட்சி ஆதனத்தின் கைமாற்றம் ஒன்று பதிவாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டு அவரால் பதிவுசெய்துகொள்ளப்படுமிடத்து முகாமைக்கூட்டுத்தாபனமானது அதன் கருமங்களை ஒடுக்கும் நோக்கங்களுக்காக, தொடர்ந்தும் இருத்தல் வேண்டும்.

(11) நீதிமன்றம், முகாமைக்கூட்டுத்தாபனத்தின் அல்லது அதன் நிருவாகியின், முன்னைய சொந்தக்காரர் ஒருவரின் அல்லது முன்னைய ஈடுபெறுபவர் ஒருவரின் விண்ணப்பத்தின்மேல், முகாமைக்கூட்டுத்தாபனத்தின் கருமங்களை ஒடுக்குவதற்கும், ஒடுக்குதலை நிறைவேற்றுதற்கு ஒழிப்போன் ஒருவரை நியமனம் செய்வதற்கும் கட்டளை மூலம் ஏற்பாடுசெய்யலாம்.

(12) முகாமைக்கூட்டுத்தாபனத்தை ஒடுக்குவதனை நிறைவேற்றும் நோக்கத்திற்காக நீதிமன்றத்தினால் ஒழிப்போன் ஒருவர் நியமிக்கப்பட்டாலன்றியும் நியமிக்கப்படும்வரையிலும், முகாமைக்கூட்டுத்தாபனத்தின் பேரவையானது, முகாமைக்கூட்டுத்தாபனத்தின் கருமங்களை ஒடுக்கும் நோக்கத்திற்காக அதன் அலுவல்களைத் தொடர்ந்தும் புரிந்துவருதல் வேண்டும். ஒழிப்போன் ஒருவர் நியமனம் செய்யப்பட்டதன்மேல், முகாமைக்கூட்டுத்தாபனத்தின் பேரவையினது தத்துவங்கள் யாவும் இல்லாதொழிதல் வேண்டும் என்பதுடன், முகாமைக்கூட்டுத்தாபனத்தின் கருமங்களை ஒடுக்கும் நோக்கத்திற்காக அதன் அலுவல்களைத் தொடர்ந்து கொண்டுநடாத்தும் தத்துவங்களை ஒழிப்போன் கொண்டவராதல் வேண்டும்.

(13) முகாமைக்கூட்டுத்தாபனமானது ஒடுக்கப்பட்டதன்மேல், 20அ என்னும் பிரிவுக்கிணங்க, முன்னைய சொந்தக்காரர்கள் செலுத்துவதற்குப் பொறுப்பாயிருந்திருக்கும் உதவுதொகையின் விகிதாசாரத்தைப் போன்ற அதே விகிதாசாரத்தில்—

(அ) அத்தகைய முன்னைய சொந்தக்காரர் ஒவ்வொருவரும், முகாமைக்கூட்டுத்தாபனத்தின் கடன்களையும் பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்ப்பதற்கும் ஒடுக்குதலுக்கான செலவுத்தொகைகள், தாக்கீடுகள், செலவுகள் ஆகியனவற்றைக் கொடுத்துத்தீர்ப்பதற்கும் போதுமானதான ஒரு தொகையளவுக்கு முகாமைக்கூட்டுத்தாபனத்தின் இருப்புச்சொத்துக்களுக்கு உதவுவதற்கு ஆளானவராதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) முகாமைக்கூட்டுத்தாபனத்தின் இருப்புச்சொத்துக்கள், எவையேனும் இருப்பின், அவை அத்தகைய முன்னைய சொந்தக்காரர்களிடையே பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

(14) நீதிமன்றமானது, முன்னைய சொந்தக்காரர் ஒருவரினது, முன்னைய ஈடுபெறுநர் ஒருவரினது அல்லது ஒழிப்போனினது விண்ணப்பத்தின்மேலும் முகாமைக்கூட்டுத்தாபனத்தின் கருமங்கள் ஒடுக்கப்பட்டுள்ளன எனத் திருப்திப்பட்டதன்மேலும், ஒழிப்போன் விடுவிக்கப்படலாம் எனவும் முகாமைக்கூட்டுத்தாபனம் கலைக்கப்படுதல் வேண்டும் எனவும் கட்டளையிடலாம் என்பதுடன், அத்தகைய கட்டளையினை இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்வதற்கெனச் சமர்ப்பித்ததன்மேல், பதிவாளரானவர், பதிவுசெய்துகொண்டு கூட்டாட்சி ஆதனம் பற்றிய துணைஇடாப்பின் இயைபான பதிவினை நீக்குதலும் வேண்டும்.

(15) இப்பிரிவில்—

(அ) "முன்னைய ஈடுபெறுநர்" என்பது துணைப்பிரிவாக்கப்பட்ட கட்டடம் ஒன்றின் துணைப்பிரிவாக்கலானது, இப்பிரிவின் கீழ் முடிவுறுத்தப்படுதற்கு நேர்முன்னர், துணைப்பிரிவாக்கப்பட்ட கட்டடத்தின் பாகமாக அமையும் கூறொன்றன் பதிவுசெய்யப்பட்ட ஈடுபெறுனராக இருந்த ஆள் ஒருவர் அல்லது குழு ஒன்று எனப் பொருளாகும்;

(ஆ) "முன்னைய சொந்தக்காரர்" என்பது துணைப்பிரிவாக்கப்பட்ட கட்டடம் ஒன்றன் துணைப்பிரிவாக்கலானது, இப்பிரிவின் கீழ் முடிவுறுத்தப்படுவதற்கு நேர் முன்னர், துணைப்பிரிவாக்கப்பட்ட கட்டடத்தின் பாகமாக அமையும் கூறொன்றன் சொந்தக்காரராக இருந்த ஆள் ஒருவர் அல்லது குழு ஒன்று எனப் பொருளாகும்.'.

முதன்மைச் சட்ட வாக்கத்தின் 26 ஆம் பிரிவைத் திருத்துதல்.

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது :—

(அ) "கட்டடம்" என்பதன் வரைவிலக்கணத்திற்கு நேரே முன்னர் பின்வரும் புதிய வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன்மூலமும் :—

'"துணைக்கூறு" என்பது, தனித்த சொத்தாண்மைக்கு முன்னப்பட்டதும் ஏதேனும் நோக்கத்திற்காக வேறேதேனும் குறித்துரைக்கப்பட்ட கூறுடன் அல்லது கூறுகளுடன் இணைந்திருப்பதுமான ஒரு கூறு என்று பொருளாகும்;

"உறுதியளிப்பு" என்பது, ஏதேனும் கைமாற்றத்தை, குத்தகையை, தாக்கீட்டை, ஈட்டை, அல்லது இச்சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட உரித்தாக்கலுக்கான வேறு ஏதேனும் விண்ணப்பத்தை உள்ளடக்கும்;';

(ஆ) "கட்டடம்" என்பதன் வரைவிலக்கணத்திற்குப் பதிலாக, பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும் :—

'"கட்டடம்" என்பது, ஏதேனும் கூட்டாட்சியாதன துணைப்பிரிவாக்கல் வரைபடத்திற்கான அங்கீகாரத்தை வழங்குவதற்கு அப்போதைக்குப் பொறுப்பாக உள்ள அதிகார சபையிடம் அங்கீகாரத்திற்கெனச் சமர்ப்பிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்ட அல்லது குறித்துரைக்கப்பட்ட மாடிக்குள்ளாக பகுதியளவில் கட்டிமுடிக்கப்பட்ட ஏதேனும் கட்டடத்தை அல்லது பொருத்தமானவிடத்து கட்டியமைக்கப்படவுள்ள ஏதேனும் கட்டடத்தை உள்ளடக்கும்;';

(இ) "பொது அமிசங்கள்" என்பதன் வரைவிலக்கணத்திற்குப் பதிலாக பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும் :—

'"பொது அமிசங்கள்" என்பது,—

(அ) உள்ளூர் அதிகாரசபையால் அங்கீகரிக்கப்பட்டதான ஏதேனும் வரைபடத்தில் அடங்கியுள்ளதான ஏதேனும் கூட்டாட்சி ஆதனம் தொடர்பில், கூட்டாட்சியாதன வரைபடம் ஒன்றில் காண்பிக்கப்பட்டதான கூறெதிலும் அப்போதைக்கு அடங்கியிராததான அக்காணியின் அவ்வளவு எனப் பொருளாகும்; அத்துடன்

(ஆ) வேறுவகையில் கூட்டாட்சி ஆதன வரைபடமொன்றிலுள்ள ஏதேனும் கூறில் அடங்கியுள்ளதாக குறிப்பாக விவரிக்கப்பட்டும், அத்தகைய கூறில் அடங்க இயலுமானதெனக் காட்டப்பட்டும் இருந்தாலன்றி,—

(i) கட்டடத்தின் அல்லது கட்டடங்களின் அத்திவாரங்கள், பத்திகள், தோட்டங்கள், வெளித் தீராந்திகள், ஆதாரங்கள், பிரதான சுவர்கள், கூரைகள், சுவர்கள், கூடங்கள், நடைகூடங்கள், படிகள், படிக்கட்டுகள், தீ தப்புவழிகள், நுழை வாயில்கள், வெளிவாயில்கள்;

(ii) மோட்டார் கார் தரிப்பிடங்கள், பொழுது போக்கு அல்லது உரையாடல் இடவசதிகள், பூங்காக்கள், ஊர்தி தரிப்பிடங்கள், கூரைகள், களஞ்சிய இடவசதிகள்;

(iii) மின்வலு, ஒளி, வாயு, வெந்நீர், தண்ணீர், சூடேற்றல், உறையவைத்தல், குளிரேற்றல், தொலைபேசி, வானொலி, ஒலிபரப்பு, குப்பை அகற்றல், எரிகருவி முதலாய சேவைகளுக்காய பிரதான மற்றும் துணைநிலை அமைப்புக்கள்;

(iv) இயங்கு ஏணிகள், தூக்கிகள், தாங்கிகள், பம்பிகள், மோட்டார்கள், விசிறிகள், அமுக்கிகள், கம்பிவடக் குழாய்கள் என்பனவும் பொதுவில் பொதுப்பயன்பாட்டுக்குள்ள எல்லா உபகரணங்களும், அமைப்புக்களும்;

(v) பாதுகாவற் சேவையாளர், கவனிப்பாளர் மற்றும் காவலாளிகள் பயன்படுத்துவதற்கான வளவுகள்;

(vi) கூட்டாட்சி ஆதன அபிவிருத்திக்கான ஏதேனும் வரைபடத்தை அங்கீகரிப்பதற்கு அப்போதைக்குப் பொறுப்பாக உள்ள அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட கூட்டாட்சியாதன அபிவிருத்

திக்கான வரைபடத்தில் பொது அமிசங்கள் என விவரிக்கப்பட்ட எல்லா வசதிகளும், கூட்டாட்சி ஆதன வரைபடத்தின் விளக்கத்தில் பொது அமிசங்களாகக் காட்டப்படக்கூடிய எல்லா வசதிகளும் ; அத்துடன்

(vii) கூட்டாட்சி ஆதனத்தைச் சேர்ந்த வீதிகள், சேர்வழிகள், வடிகால்கள், குழிகள், ஒழுங்கைகள், பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் திறந்த வெளிகள் உள்ளிட்ட பொது அமிசங்கள் இருந்துவருவதற்கும் அவற்றைப் பேணுவதற்கும் அவற்றின் நியாயமான பொதுப் பயன்பாட்டிற்கும் பாதுகாப்புக்கும் அவசியமாக உள்ள அல்லது வசதியாக உள்ள ஏதேனும் கூறில் உள்ளடக்கப்படாத காணியின் மற்றெல்லாப் பாகங்களும் ;';

(ஈ) "பொது அமிசங்கள்" என்பதன் வரைவிலக்கணங்களை உடன் அடுத்து பின்வரும் புதிய வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன் மூலமும்—

'"கூட்டாட்சியாதன வரைபடம்" என்பது—

(அ) அதற்கான தலைப்பில் அல்லது தலையங்கத்தில் கூட்டாட்சியாதன வரைபடம் ஒன்று என விவரிக்கப்பட்டதும் ;

(ஆ) அதனகத்து அடங்கியுள்ளதான காணி முழுவதும் அல்லது அதன் ஏதேனும் பாகம் இரண்டோ பல வோவாய மாடிகளாக (ஏதேனும் மாடியானது இரண்டு அல்லது அதற்கு மேலான கூறுகளாகப் பிரிக்கப்பட்டிருப்பினுஞ்சரி, அல்லாவிடினுஞ்சரி) பிரிக்கப்பட்டிருப்பதாகக் காண்பிப்பதும் ;

(இ) பிரிவு 5 இல் தரப்பட்டுள்ள விவரங்களைக் கொண்டுள்ளதும் ஆன பதிவு செய்யப்பட்ட வரைபடம் ஒன்று எனப் பொருளாகும் ;

"கூட்டாட்சியாதன துணைப்பிரிவாக்கம்" என்பது ஒன்றோ பலவோவாய கூறுகளை, அக்கூறுகள் வேறேதேனும் கூறைப்போன்று அதே மாடியில் இருப்பினும்சரி அல்லாவிடினும்சரி, உள்ளடக்கும் வகையில் காணி துணைப்பிரிவாக்கப்படுதலை உள்ளடக்கும் ;';

(உ) "பாரபந்தம்" என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்து பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும்—

"காணி" என்பது, ஏதேனும் உடைமையுரிமைக்குட்பட்ட காணியையும், ஏதேனும் கட்டடம் அல்லது அதன் பாகங்களையும், எவரேனும் சொந்தக்காரரால் நியாயமாகப்

பயன்படுத்தப்படக்கூடிய அல்லது துய்க்கப்படக்கூடிய மேற்பரப்புக்கு மேலேயுள்ள அந்த அளவினதான வான் வெளியையும் அத்துடன் மேற்பரப்பிலிருந்தும் அதன்கண் உள்ள ஏதேனும் சொத்துரிமையிலிருந்தும் அல்லது அக் கறையிலிருந்தும், வேறாக வைத்திருக்கப்படினுஞ்சரி அல்லாவிடினும்சரி (1973 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, சுரங்கங்கள் கனிப்பொருள்கள் சட்டத்தின் பொருளுக்குட்பட்ட கனிப்பொருள்கள் நீங்கலாக) மேற்பரப்புக்குக் கீழாகவுள்ள எல்லாப் பதார்த்தங்களையும் உள்ளடக்கும் ;' ;

(ஊ) "உள்ளூர் அதிகார சபை" என்பதன் வரைவிலக்கணத்தினை உடனடுத்து பின்வரும் புதிய வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன் மூலமும் :—

'"முகாமைக் கூட்டுத்தாபனம்" என்பது, கூட்டாட்சியாதன வரைபடம் ஒன்றில் காட்டப்பட்ட ஒரு அல்லது ஒன்றுக்கு அதிகமான துணைப்பிரிவாக்கப்பட்ட கட்டடங்கள் தொடர்பில், அக்கட்டடங்களுக்கெனத் தாபிக்கப்பட்ட முகாமைக் கூட்டுத்தாபனம் எனப் பொருளாகும் ;

"சொந்தக்காரர்" என்பது, காணியைத் துணைப்பிரிவாக்குவதற்கு நேர்முன்னர் இருந்த காணியின் சொந்தக்காரர் எனப் பொருளாகும் ;

"கூறின்சொந்தக்காரர்" என்பது, கூறில் இறையில் நிலச்சொத்துரிமை ஒன்றினைக் கொண்டுள்ளவரான அல்லது கூறின்கண் குத்தகைப்பற்றுச் சொத்துரிமை உருவாக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய குத்தகைப் பற்றுச் சொத்துரிமை உருவாக்கியமை பதிவுசெய்யப்பட்ட தேதியிலிருந்து கணக்கிடப்பட்ட இருபது ஆண்டுகளுக்குக் குறையாத முடிவுறாத காலப் பகுதியொன்றுக்கு கூறில் குத்தகைப்பற்றுச் சொத்துரிமை ஒன்றினைக்கொண்டுள்ளவரான கூறொன்றின் அப்போதைக்கான பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் எனப் பொருளாகும் ;' ;

(எ) "பகிரங்கக் கூட்டுத்தாபனம்" என்பதன் வரைவிலக்கணத்தினை விட்டுவிடுவதன்மூலமும் ;

(ஏ) "பதிவாளர்" என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தினை உட்புகுத்துவதன்மூலமும்—

"பங்குக் கூறுகள்" என்பது, கூறொன்றன் தொடர்பில், அதன் பங்குப் பெறுமதிக்கு இணங்க அக்கூறுக்கெனத் தீர்மானிக்கப்பட்டதும், கூட்டாட்சி ஆதன வரைபடத்தில்

புறக்குறிப்பிடப்பட்டதான அட்டவணையில் அத்தகைய வாறு காண்பிக்கப்பட்டதுமான பங்குக் கூறுகள் எனப் பொருளாகும்;

"விசேட தீர்மானம்" என்பது, எல்லோருமாக பங்குக்கூறுகளின் நான்கில் மூன்றுக்குக் குறையாத பங்குக்கு உரித்துடையவர்களும், அல்லது அவ்வாறு உரித்துடையவர்களை பிரதிநிதித்துவம் செய்கின்றவர்களும், அத்துடன் எல்லோருமாக உறுப்பாண்மையின் நான்கில் மூன்றுக்குக் குறையாத பங்கினை அமைக்கின்றவர்களும், அல்லது அவ்வாறு அமைக்கின்றவர்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்றவர்களும், இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்டதான வாக்களிக்கும் தத்துவங்களை நேரில் அல்லது பதிலிமூலம் பிரயோகிப்பதற்கு உரித்துள்ளவர்களுமான ஆட்களால் கூட்டம் பற்றிய உத்தேச விசேட தீர்மானத்தினைக் குறித்துரைக்கும் அறிவித்தலானது குறைந்தது பதினான்கு நாட்களுக்குமுன்னர் கொடுக்கப்பட்டதான முகாமைக் கூட்டுத்தாபனத்தின் கூட்டமொன்றில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்று எனப் பொருளாகும்;

"மாடி" என்பது, காணியின் மேற்பரப்புக்குக் கீழே, மேற்பரப்பில், அல்லது மேற்பரப்பின்மேல் அல்லது பகுதியளவில் காணியின் மேற்பரப்புக்குக் கீழே அல்லது மேலே ஏதேனும் வடிவத்தில் இடைவெளியொன்றைக் கொண்டுள்ளதும் அதன் பரிமாணங்கள் அளக்கப்பட்டதுமான காணியின் ஏதேனும் பாகம் எனப் பொருளாகும்;

"துணைப்பிரிவாக்கப்பட்ட கட்டடம்" என்பது, உள்ளூர் அதிகார சபையால் அங்கீகரிக்கப்பட்ட கூட்டாட்சி ஆதன வரைபடத்தில் அடங்கியுள்ளதான ஏதேனும் ஒரு அல்லது அதற்கு அதிகமான கட்டடங்கள் எனப் பொருளாகும்;

"ஏகமனதான தீர்மானம்" என்பது, இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட வாக்களிக்கும் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு உரித்துடையவர்களான எல்லா ஆட்களும் பிரேரணை கொண்டுவந்த நேரத்தில் நேரில் அல்லது பதிலிமூலம் சமுகமளித்துள்ளதும் உரிய முறையில் கூட்டப்பட்டதுமான முகாமைக் கூட்டுத்தாபனத்தின் கூட்டம் ஒன்றில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானம் எனப் பொருளாகும்;'; அத்துடன்

(ஐ) "கூறு" என்பதன் வரைவிலக்கணத்திற்குப் பதிலாக பின்வரும் வரைவிலக்கணத்தினை இடுவதன்மூலமும்—

'"கூறு" என்பது, கூட்டாட்சியாதன வரைபடம் ஒன்றில் தனியான ஒரு கூறு எனக் காண்பிக்கப்பட்டதும், ஒன்றுக்கு அதிகமான மாடிகளுள்ள கட்டடம் ஒன்றில் ஒன்றுக்கு அல்லது அதற்கு அதிகமான மாடிகள் முழுவதையும் அல்லது அதன் பாகத்தினை இடம்கொள்வதாயினும்சரி அல்லாவிடினும்சரி, ஒன்றுக்கு அல்லது அதற்கு அதிகமான அறைகளைக் கொண்டதாய் தனிப் பயன்பாட்டிற்கென

வரையப்பட்டதும் அத்துடன், கூட்டாட்சியாதன வரை படம் ஒன்றில் தனிப்பட்ட ஒரு கூறாகக் காட்டப்பட்டது மான வரைவுசெய்யப்பட்ட இடைவெளி எனப் பொருளா கும். அத்துடன், அத்தகைய வரையறை செய்யப்பட்ட இடைவெளியானது ஒரு தெருவுக்கு வெளியேறக்கூடிய நேரடி வழியை அல்லது ஒரு தெருவை அடையக்கூடியதா யும் அதே விவரணத்தினைக்கொண்டதாய, மூடியடைக்கப் பட்ட இடைவெளிக்கு அதனூடாக வழியுள்ளதாக இருக்க முடியாததுமான பொது இடப்பரப்பொன்றைக் கொண்ட தாயும் இருக்குமாயின், அத்தகைய ஏதேனும் வரைபடத் தில் துணைக்கூறொன்றெனக் குறித்துரைக்கப்பட்ட கூறொன்றினை உள்ளடக்கும்.'.

13. முதன்மைச் சட்டவாக்கமானது, அதன்கண் 26 ஆம் பிரிவினை உடனடுத்து பின்வரும் அட்டவணைகளைச் சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத் திற்கு அட்ட வணைகளைச் சேர்த்தல்.

முதலாம் அட்டவணை

(பிரிவுகள் 20ஆ, 20ஔ)

முகாமைக் கூட்டுத்தாபனம்

1. இவ்வட்டவணையின ஏதேனும் குறிப்பிட்ட முகாமைக் கூட்டுத்தாபனத் திற்கு ஏற்புடைத்தாக்கும்போது—

"கூட்டுத்தாபனம்" என்பது, சம்பந்தப்பட்ட முகாமைக் கூட்டுத்தாபனம் என்று பொருளாகும் ;

"பேரவை" என்பது, கூட்டுத்தாபனத்தின் பேரவை என்று பொருளாகும் ;

"பொதுக்கூட்டம்" என்பது, கூட்டுத்தாபனத்தின் ஒரு பொதுக் கூட்டம் என்று பொருளாகும் ;

"சொந்தக்காரர்" என்பது, கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் ஒருவராக உள்ள கூறொன்றின் சொந்தக்காரர் என்று பொருளாகும்.

2. கூட்டுத்தாபனத்தின் கூட்டிணைக்கப்பட்ட பெயர் " ஆம் இலக்க, முகா மைக் கூட்டுத்தாபன கூட்டாட்சியாதன வரைபடம்" என்பதாதல் வேண்டும் ; இங்கு குறித்துரைக்கப்படவேண்டிய இலக்கம் இயைபான கூட்டாட்சியாதன வரைபடத்தின் தொடர் இலக்கமாதல் வேண்டும்.

3. (1) இப்பந்தியின் ஏற்பாடுகளுக்கும் சட்டத்தின்கீழ் ஆக்கப்படும் எவை யேனும் ஒழுங்குவிதிகளுக்கும் அமைய, பேரவையானது மூவருக்குக் குறையாத வரும் பதினொன்றுக்கு மேற்படாதவருமான சொந்தக்காரர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் ; இவர்கள் ஆண்டுப் பொதுக்கூட்டம் ஒவ்வொன்றிலும் தேர்ந்தெடுக்கப் படுதல் வேண்டும் என்பதோடு, அடுத்த ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் பதவிவகிக் காதொழிதலும் வேண்டும்.

(2) (அ) முதலாவது ஆண்டுப் பொதுக்கூட்டம் இன்னமும் நடத்தப்படாது இருக்கின்றவிடத்து ; அல்லது

(ஆ) மூன்றுக்கு மேற்படாத சொந்தக்காரர்கள் இருக்கின்றவிடத்து,

பேரவையானது எல்லாச் சொந்தக்காரர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) பேரவையானது எல்லாச் சொந்தக்காரர்களையும் கொண்டிருக்குமிடத்துத் தவிர, கூட்டுத்தாபனமானது அதிவிசேட பொதுக் கூட்டம் ஒன்றிலான தீர்மான மூலம் எந்நேரத்திலும், பேரவையின் உறுப்பினர் எவரையும் பதவியிலிருந்து அகற்றிவிட்டு அடுத்த ஆண்டுப் பொதுக்கூட்டம்வரை அவரின் இடத்தில் பதவி வகிப்பதற்கென வேறொரு சொந்தக்காரரை நியமிக்கலாம்.

(4) பேரவையின் உறுப்பினர் ஒருவர், கூட்டுத்தாபனத்திற்கு முகவரியிடப்பட்டனுப்பப்பட்ட அவரின் கைப்பட்ட எழுத்துமூலம் எந்நேரத்திலும் தமது பதவியிலிருந்து விலகலாம்.

(5) இப்பந்தியின் (1) ஆம் உட்பந்தியின் அல்லது (3) ஆம் உட்பந்தியின் நடைமுறை காரணமாக அல்லாது வேறுவகையாக பேரவையின் உறுப்பாண்மையில் வெற்றிடம் ஒன்று ஏற்படுகின்றவிடத்து, எஞ்சியுள்ள உறுப்பினர்கள் அடுத்த ஆண்டுப் பொதுக்கூட்டம்வரை உறுப்பினராக இருப்பதற்கென வேறொரு சொந்தக்காரரை நியமிக்கலாம்.

(6) பேரவை உறுப்பினர்கள் மீளத்தெரிவு செய்யப்படுவதற்கு அல்லது மீள நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையோராதல் வேண்டும்.

4. பேரவையானது அது பொருத்தமானதென எண்ணும் அத்தகைய நேரங்களிலும் இடங்களிலும் அத்தகைய கால இடைவெளிகளிலும் கூடுதல் வேண்டும் :

ஆயின், பேரவையின் எவரேனும் உறுப்பினர், கூட்டத்திற்கான தேதியை நியமிப்பதன்மூலமும் ஏனைய உறுப்பினர்களுக்கு நியமிக்கப்பட்ட தேதி பற்றி ஏழு நாட்களுக்குக் குறையாத அறிவித்தலைக் கொடுப்பதன் மூலமும் கூட்டம் ஒன்றைக் கூட்டலாம்.

5. (1) ஒரே ஒரு சொந்தக்காரர் மட்டுமே இருக்கின்றவிடத்துத் தவிர, சபையின் கூட்டங்களுக்கான கூட்ட நடப்பெண் பின்வருமாறுதல் வேண்டும் :—

(அ) நான்கு உறுப்பினர்களுக்கு மேற்படாதோர் இருக்கின்றவிடத்து, இரண்டு உறுப்பினர்கள் ;

(ஆ) ஐந்து அல்லது ஆறு உறுப்பினர்கள் இருக்கின்றவிடத்து, மூன்று உறுப்பினர்கள் ;

(இ) ஏழு அல்லது எட்டு உறுப்பினர்கள் இருக்கின்றவிடத்து, நான்கு உறுப்பினர்கள் ;

(ஈ) ஒன்பது அல்லது பத்து உறுப்பினர்கள் இருக்கின்றவிடத்து, ஐந்து உறுப்பினர்கள் ;

(உ) பதினொன்று அல்லது பன்னிரண்டு உறுப்பினர்கள் இருக்கின்றவிடத்து, ஆறு உறுப்பினர்கள் ; அத்துடன்

(ஊ) பதின்மூன்று அல்லது பதினான்கு உறுப்பினர்கள் இருக்கின்றவிடத்து, ஏழு உறுப்பினர்கள்.

(2) கூட்டங்களில் எழும் பிரச்சினைகள், சாதாரண பெரும்பான்மை வாக்கு மூலம் முடிவுசெய்யப்படுதல் வேண்டும்.

(3) சபையின் கூட்டம் ஒவ்வொன்றும் தவிசாளர் ஒருவரினால் தலைமைதாங்கப்படுதல் வேண்டும் ; கூட்டத்திற்குச் சமுகமளித்திருக்கும் பேரவை உறுப்பினர்கள் தம்முள் இருந்து இத்தவிசாளரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும் ; இத்தவிசாளர் மூல வாக்குடன் அறுதியிடும் வாக்கொன்றும் உடையவராதல் வேண்டும்.

(4) இப்பந்திக்கு அமைய, பேரவையானது கூட்டங்களில் அதன் சொந்த நடவடிக்கை முறையினை ஒழுங்குபடுத்தலாம்.

6. பொதுக்கூட்டம் ஒன்றில் கூட்டுத்தாபனத்தினால் விதிக்கப்படும் ஏதேனும் கட்டுப்பாட்டுக்கு அமைய அல்லது விடுக்கப்படும் ஏதேனும் பணிப்புரைக்கு அமைய, பேரவையானது—

(அ) அதன்தத்துவங்களுள் எதனையேனும் பிரயோகிப்பதனை அல்லது அதன் கடமைகளுள் எதனையேனும் புரிவதனை அதன் உறுப்பினர் ஒருவருக்கு அல்லது ஒருவருக்கு மேற்பட்டோருக்குக் கையளிக்கலாம்; அத்துடன்

(ஆ) அக்கையளிப்பை எந்நேரத்திலேனும் ஒழிக்கலாம்.

7. பேரவையானது, கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களைப் பிரயோகித்தல் சம்பந்தமாகவும், அதன் கடமைகளைப் புரிதல் சம்பந்தமாகவும் அது பொருத்தமான தென என்னும் அத்தகைய முகவர்களையும் சேவையாளர்களையும் கூட்டுத்தாபனத்திற்காகவும் அதன் சார்பிலும் தொழிலுக்கமர்த்தலாம்.

8. (1) பேரவையானது அதன் நடவடிக்கைகள் பற்றிய நிகழ்ச்சிக்குறிப்புகளை வைத்திருத்தல் வேண்டும் என்பதுடன், பொதுக்கூட்டங்கள் பற்றிய நிகழ்ச்சிக் குறிப்புகளை வைத்திருக்கச் செய்தலும் வேண்டும்.

(2) பேரவையானது—

(அ) அதனால் பெறப்பட்டு செலவிடப்பட்ட எல்லாப் பணத்தொகைகள் தொடர்பிலும் முறையான கணக்குப் புத்தகங்கள் வைத்திருக்கச்செய்தல் வேண்டும். எக்கருமங்கள் தொடர்பாக வரவுகளும் செலவினங்களும் இடம்பெற்றனவோ அக்கருமங்களை அப்புத்தகங்களில் குறித்துரைத்தலும் வேண்டும்; அத்துடன்

(ஆ) கூறொன்றின் சொந்தக்காரர் ஒருவர் அல்லது ஈடுபெறுநர் ஒருவர் (அல்லது அவரினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள்) விண்ணப்பிப்பதன்மீது, நியாயமான எல்லா நேரங்களிலும் பார்வையிடப்படுவதற்கு கணக்குப்புத்தகங்களை கிடைக்கச்செய்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் எல்லாப் பணங்களும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் வருமானம், செலவினம் என்பனவும் தொடர்பிலான முறையான கணக்குகளை ஒவ்வோர் ஆண்டுப் பொதுக் கூட்டத்திற்காகவும் பேரவை தயாரித்தல் வேண்டும்.

(4) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் பேரவையினால் நியமிக்கப்படும் கணக்காய்வாளர்களினால் ஆண்டுதோறும் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(5) பேரவையானது அதன் பொதுக்கூட்டத்தின் பின்னர், பின்வருவனவற்றின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட உண்மைப் பிரதிகளைப் பொது வசதிகள் சபையில் கோப்பிடுதல் வேண்டும் :—

(அ) பொதுக்கூட்டத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட, கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் (எவையேனுமிருப்பின்);

(ஆ) பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்; அத்துடன்

(இ) பொதுக்கூட்டத்தின் நிகழ்ச்சிக்குறிப்புகள்.

(6) பேரவையானது, பொதுவசதிகள் சபையையோ அல்லது அதன் சார்பில் செயலாற்றவென அதனால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளையோ நியாயமான எல்லா நேரங்களிலும் கூட்டுத்தாபனத்தின் கணக்கீட்டுப் பதிவேடுகளையும் ஏனைய பதிவேடுகளையும் முழுமையாகவும் கட்டின்றியும் அணுகிப் பார்வையிட அனுமதித்தல் வேண்டும் என்பதோடு, பொதுவசதிகள் சபை அல்லது அத்தகைய ஆள் அத்தகைய ஏதேனும் கணக்கீட்டுப் பதிவேடுகளிலிருந்து அல்லது ஏனைய பதிவேடுகளிலிருந்து பிரதிகள் எடுப்பதை அல்லது பொழிப்புகள் எடுப்பதை அனுமதித்தலும் வேண்டும்.

13. ஒவ்வொரு பொதுக்கூட்டமும் தவிசாளரொருவரினால் தலைமை தாங்கப்படுதல் வேண்டும். அவர் அக்கூட்டத்தில் சமூகமாயிருக்கும் வாக்களிக்க உரித்துடைய ஆட்களுள் இருந்து தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

14. (1) பொதுக்கூட்டம் ஒன்றிலான தீர்மானம், வாக்களிக்க உரித்துடைய ஓர் ஆளினால் வாக்கெடுப்பு கோரப்பட்டால் ஒழிய, கைகளை உயர்த்துவதன்மூலம் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(2) வாக்கெடுப்புக் கோரப்பட்டால் ஒழிய, கைகளை உயர்த்துவதன் மூலம் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளதெனத் தவிசாளரினால் செய்யப்படும் வெளிப்படுத்துகை, அத்தீர்மானத்திற்குச் சாதகமாக அல்லது பாதகமாகக் கிடைத்த வாக்குகளின் எண்ணிக்கை அல்லது விகிதாசாரம் பற்றிய எண்பிப்பு இல்லாமல் அந்நிகழ்வுபற்றிய முடிவான சான்றாதல் வேண்டும்.

(3) வாக்கெடுப்புக்கான ஒரு கோரிக்கை மீளப்பெறப்படலாம்.

(4) வாக்கெடுப்பு எடுக்கப்படுகின்றவிடத்து, அது தவிசாளர் பொருத்தமானதென எண்ணும் அத்தகைய முறையில் எடுக்கப்படல் வேண்டும்; அத்துடன், வாக்கெடுப்பின் முடிவு, வாக்கெடுப்பு எந்தக் கூட்டத்தில் கோரப்பட்டதோ அந்தக் கூட்டத்தின் தீர்மானமாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) வாக்குகள் சமமாக இருக்கும்பட்சத்தில் (கைகளை உயர்த்துவதன் மூலமாயினும் சரி, வாக்கெடுப்பு மூலமாயினும் சரி) தவிசாளர் தமது மூலவாக்குடன் அறுதியிடும் வாக்கொன்றுக்கும் உரித்துடையவராதல் வேண்டும்.

15. (1) கைகளை உயர்த்துவதன் மூலமாயினும் சரி அல்லது வாக்கெடுப்பு மூலமாயினும் சரி வாக்குகள் நேரடியாகவோ பதிலிமூலமாகவோ அளிக்கப்படலாம்.

(2) (சொந்தக்காரர் ஒருவராயிருக்கவேண்டியவரல்லாத) பதிலி ஒருவரை நியமிக்கும் சாதனம், அந்நியமனத்தைச் செய்கின்ற ஆளின் அல்லது அவரது அற்றோணித் தத்துவக்காரரின் கைப்பட்ட எழுத்து மூலமாதல் வேண்டும்; அத்துடன் அது, ஒரு பொதுக்கூட்டத்திற்காகவோ அல்லது குறிப்பான கூட்டத்திற்காகவோ இருக்கலாம்.

16. கூட்டுச் சொந்தக்காரராயிராத ஒவ்வொரு சொந்தக்காரரும் கைகளை உயர்த்தும்போது ஒரு வாக்கையும், வாக்கெடுப்பின்போது அவரது கூறைச்சார்ந்துள்ள பங்குக்கூறுகளின் எண்ணிக்கைக்கு நேரொத்த அத்தகைய எண்ணிக்கை கொண்ட வாக்குகளையும் உடையவராவார்:

ஆயின், ஏகமனதான தீர்மானம் ஒன்று தேவைப்படுகின்றவிடத்துத் தவிர, சொந்தக்காரர் எவரும் அவரது கூறு தொடர்பிலான கூட்டுத்தாபனத்தின் முகாமைநிதியத்திற்கான எல்லா உதவுதொகைகளும் முறையாகக் கொடுக்கப்பட்டிருந்தாலொழிய, ஒரு பொதுக்கூட்டத்தில் வாக்களிப்பதற்கு உரித்துடையவராகார்.

17. (1) கூட்டுச் சொந்தக்காரர்கள் கூட்டாக நியமிக்கப்பட்ட பதிலி மூலம் வாக்களிக்கலாம்.

(2) பதிலி ஒருவர் இல்லாதவிடத்து, ஏகமனதான தீர்மானம் ஒன்று தேவைப்பட்டவிடத்தன்றி, கூட்டுச் சொந்தக்காரர்கள் கைகளை உயர்த்துவதன் மூலம் வாக்களிக்க உரித்துடையவராகார்:

ஆயின், எவரேனும் ஒரு கூட்டுச்சொந்தக்காரர் வாக்கெடுப்பு ஒன்றைக் கோரலாம்.

(3) வாக்கெடுப்பொன்றின்மீது ஒவ்வொரு கூட்டுச்சொந்தக்காரரும் (துண்டுப் பகுதிகளைக் கருத்துக்கெடாமல்) கூறிலுள்ள அவரது அக்கறைக்கு விகிதாசாரமாக அவரது கூறைச்சார்ந்துள்ள அத்தகைய எண்ணிக்கையினவான வாக்குகளுக்கு உரித்துடையவராவார்.

18. கூட்டுத்தாபனத்தின் பொது இலச்சினை, முன்னரே கொடுக்கப்பட்ட பேரவையின் அதிகாரத்தின்மீதும், பேரவையின் உறுப்பினர்களில் ஆகக்குறைந்தது இரு உறுப்பினர்களின் முன்னிலையிலும் தவிர, பயன்படுத்தப்படுதலாகாது; அவ்விரு உறுப்பினர்களும் எந்தச் சாதனத்துக்கு இலச்சினையானது பொறிக்கப்படுகின்றதோ அந்தச் சாதனத்தை ஒப்பமிடுதல் வேண்டும்:

ஆயின், கூட்டுத்தாபனத்தின் ஒரே ஒரு உறுப்பினர் மாத்திரம் இருக்கின்றவிடத்து, அவரது சமுகமும் ஒப்பமும் போதுமானதாதல் வேண்டும்.

## இரண்டாம் அட்டவணை

(பிரிவுகள் 20இ, 20எ.)

பதிவு செய்யப்பட்ட கூட்டாட்சி வரைப்படத்திலுள்ள துணைப் பிரிவாக்கப்பட்ட கட்டடத்தை ஒழுங்குபடுத்துவதற்கான துணைவிதிகள்

### பாகம் 1

(1) ஏதேனும் குறிப்பிட்ட துணைப்பிரிவாக்கப்பட்ட கட்டிடத்திற்கு இத் துணைவிதிகளைப் பிரயோகிக்கையில்—

"கட்டடம்" என்பது, சம்பந்தப்பட்ட பதிவுசெய்யப்பட்ட கூட்டாட்சி வரைபடமொன்றிலுள்ள துணைப்பிரிவாக்கப்பட்ட கட்டடம் ஒன்று என்று பொருளாகும்;

"கூட்டுத்தாபனம்" என்பது, கட்டடத்தின் முகாமைக் கூட்டுத்தாபனம் என்று பொருளாகும்;

"கூறு" என்பது, கட்டடத்திலுள்ள ஒரு கூறு என்று பொருளாகும்;

"சொந்தக்காரர்" என்பது, கட்டடத்திலுள்ள கூறொன்றின் சொந்தக்காரர் என்று பொருளாகும்.

(2) இத் துணைவிதிகளின் 2 ஆம் துணைவிதியின் (எ) என்னும் பந்தியில் தவிர (எவ்வாறு குறிப்பிடினும்) கூறொன்றன் சொந்தக்காரரொருவர் பற்றி இத் துணை விதிகளிலுள்ள குறிப்பீடுகள், சந்தர்ப்பம் அவ்வாறு அனுமதிக்குமாயின், கூறொன்றன் சொந்தக்காரராயிராத ஆளொருவரால் இருப்பாட்சி செய்யப்படும் கூறொன்றன் விடயத்தில், அக்கூறின் இருப்பாட்சியாளரையும் உள்ளடக்குவதாகப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

2. சொந்தக்காரர் ஒருவர்—

(அ) பின்வரும் நோக்கங்களுக்காக, கூட்டுத்தாபனத்தையும் அதன் முகவர்களையும் நியாயமான எல்லா நேரங்களிலும் (அறிவித்தல் எதுவும் தேவைப்படுத்தப்படாத அவசர நிலைமைகளின் விடயத்தில் தவிர) நியாயமான அறிவித்தல் கொடுத்த பின்னரும் தனது கூறுக்குள் நுழைவதற்கு அனுமதித்தல் வேண்டும்.

(i) கூறைப் பார்வையிடல்;

(ii) வேறு ஏதேனும் கூறினை அல்லது பொது அமிசங்களைத் துய்த்தல் சம்பந்தமாகப் பயன்படுத்தப்படும் அல்லது பயன்படுத்தப்படக் கூடியவையான வடிகால்வாய்களையும், குழாய்களையும், கம்பிவடங்களையும், கம்பித் திரிவடங்களையும் அத்துடன் மின்கம்பிவடக் குழாய்களையும் பேணுதல், பழுதுபார்த்தல் அல்லது புதுப்பித்தல்;

(iii) பொது அமிசங்களைப் பேணுதல், பழுதுபார்த்தல், அல்லது புதுப்பித்தல்; அல்லது

(iv) அதன் கடமைகள் புரியப்படுவதற்காக அல்லது அது சம்பந்தமாக அல்லது இத்துணைவிதிகளை அல்லது கட்டடம் சம்பந்தமான வேறு துணைவிதிகளை வலுவுக்கிடுவதற்காக அல்லது அவை சம்பந்தமாக நியாயமாக அவசியமான ஏதேனும் வேலையினை நிறைவேற்றுதல் அல்லது ஏதேனும் செயலைச் செய்தல்;

(ஆ) பொதுவாகவே கட்டடத்திற்கு நலன்பயப்பவை தவிர்ந்தவையும் அவரது கூறு தொடர்பில் ஏதேனும் அரசாங்க, பகிரங்க அல்லது நியதிச்சட்டமுறையான அதிகாரசபையினால் கட்டளையிடப்பட்டவையுமான எல்லா வேலைகளையும் உடனடியாக நிறைவேற்றுதல் வேண்டும் என்பதுடன், அவரது கூறு தொடர்பில் செலுத்தப்படற்பாலவையாக உள்ள எல்லா வரிமதிப்பீட்டுக் கட்டணங்களையும் செல்மதியாக உள்ளவைகளையும் செலுத்துதலும் வேண்டும்:

(இ) அவரின் கூறினை பழுதுபார்த்துப் பேணுதல் வேண்டும் என்பதுடன் பழுதுபார்க்கப்பட்ட நல்லதொரு நிலையில் வைத்திருத்தலும் வேண்டும்; நியாயமான தேய்மானங்கள், நெருப்பு, புயல்காற்று, சூருவளி அல்லது தெய்வாதீனச்செயல் ஆகியவற்றால் ஏற்படும் சேதம் இவற்றிற்கு விலக்கானவையாகும்;

(ஈ) பொது அமிசங்கள் மற்றச் சொந்தக்காரர்களாலும் அல்லது அவர்கள் குடும்பங்களாலும், அல்லது விருந்தினராலும் பயன்படுத்தப்படுவதுடனும் துய்க்கப்படுவதுடனும் நியாயமற்ற முறையில் தலையிடாதவாறு அத்தகைய ஒரு முறையில் அப்பொது அமிசங்களைப் பயன்படுத்துதலும் துய்த்தலும் வேண்டும்;

(உ) வேறு எவரேனும் சொந்தக்காரருக்கு அல்லது அத்தகைய சொந்தக்காரரின் குடும்பத்திற்கு ஒரு தொல்லையை அல்லது ஓர் ஆபத்தை ஏற்படுத்தும் அத்தகையதொரு முறையில் அல்லது அத்தகையதொரு நோக்கத்திற்காக அவரின் கூறினைப் பயன்படுத்துதலாகாது அல்லது பயன்படுத்துவதற்கு அனுமதித்தலாகாது;

(ஊ) வரைபடத்தினை அங்கீகரிப்பதற்கு அப்போதைக்குப் பொறுப்பாக உள்ளதான அதிகாரசபையினால் அங்கிகரிக்கப்பட்ட அந்தகைய வரைபடத்தில் காட்டப்பட்ட கூறினைப் பயன்படுத்துவதற்கான நியதிகளுக்கு முரணான ஏதேனும் நோக்கத்திற்கென அவரின் கூறினைப் பயன்படுத்துதலாகாது; அத்துடன்

(எ) அவரின் கூறின் சொத்தாண்மையிலுள்ள மாற்றம் எதையும்பற்றி அல்லது அவர் அறிந்திருப்பதான அவரின் கூறிலுள்ள ஏதேனும் வேறு கையாளுகை பற்றி உடனடியாகக் கூட்டுத்தாபனத்திற்கு அறிவித்தல் வேண்டும்.

3. கூட்டுத்தாபனமானது, பொது அமிசங்களை எல்லாச் சொந்தக்காரர்களினதும் நலனுக்காகக் கட்டுப்படுத்துதலும், முகாமை செய்தலும், அத்துடன் நிருவகித்தலும் வேண்டும்:

ஆயின், கூட்டுத்தாபனமானது, குறிப்பிட்ட சொந்தக்காரர் ஒருவருடனான உடன்படிக்கையின் மூலம் பொது அமிசங்களின் பாகத்தின் புறநீங்கலான பயன்பாட்டையும் துய்த்தலையும் பொது அமிசங்கள் அல்லது அவற்றின் பாகம் தொடர்பான விசேட சிறப்புரிமைகளையும் அவருக்கு அளிக்கலாம்.

4. கூட்டுத்தாபனமானது, குறிப்பிட்ட ஒரு சொந்தக்காரருடன், அவரின் கூறுக்கு அல்லது அது தொடர்பாக கூட்டுத்தாபனத்தினால் வசதிகள் அல்லது சேவைகள் ஏற்பாடுசெய்யப்படுவதற்காக உடன்படிக்கை ஒன்றினைச் செய்து கொள்ளலாம்.

5. கூட்டுத்தாபனமானது—

(அ) கூட்டாட்சி ஆதனத்தில் உள்ளவையும் ஒன்றுக்கு அதிகமான கூறுகளை அல்லது பொது அமிசங்களைத் துய்த்தல் சம்பந்தமாக, பயன்படுத்தப்படுவனவும் அல்லது பயன்படுத்தப்படக்கூடியவகையாக (தூக்கிகள் உட்பட) இருப்பனவுமான நிலையான பொருத்திகளையும், பொருத்திகளையும் பழுதுபார்க்கப்பட்ட பயனுக்கிடத்தக்க ஒரு நன்நிலையில் பேணி வருதல் வேண்டும்.

(ஆ) சாத்தியமாகுமிடத்து, பொது அமிசங்களில் பொருத்தமான புற்தரைகளையும் தோட்டங்களையும் தாபித்துப் பேணுதல் வேண்டும்;

(இ) ஒன்றுக்கு அதிகமான கூறுகளை அல்லது பொது அமிசங்களைத் துய்த்தல் சம்பந்தமாகப் பயன்படுத்தக்கூடியனவான வடிகால்வாய்கள், குழாய்கள், கம்பிவடங்கள், கம்பித் திரிவடங்கள் அத்துடன் மின்கம்பி வடக் குழாய்கள் என்பனவற்றைப் பேணுதல், பழுதுபார்த்தல் அத்துடன் (அவசியமாகுமிடத்து) புதுப்பித்தல் வேண்டும்; அத்துடன்

(ஈ) சொந்தக்காரரினது அல்லது அவரினது கூறின் பதிவுசெய்யப்பட்ட ஈடுபெறுநர் ஒருவரினது எழுத்திலான வேண்டுகோளின்பேரில், விடயத்திற்கேற்ப, சொந்தக்காரருக்கு அல்லது ஈடுபெறுநருக்கு (அல்லது சொந்தக்காரரால் அல்லது ஈடுபெறுநரால் எழுத்தில் அதிகாரமளிக்கப் பட்டவரான ஆள் ஒருவருக்கு) கூட்டுத்தாபனத்தால் செய்யப்பட்ட காப்புறுதிப்பூட்கைகள் எல்லாவற்றையும், பூட்கைகள் தொடர்பில் இறுதியாகச் செலுத்தப்பட்டதான கட்டுப்பணத்திற்கான பற்றுச்சீட்டு களுடன் சேர்த்துக்கொடுத்தல் வேண்டும்.

## பாகம் 2

6. சொந்தக்காரர் ஒருவர்—

(அ) கட்டடத்தின் நற்பெயருக்கு ஊறுவிளைவிக்கக்கூடியதான (சட்டமுறை யற்ற அல்லது வேறுவகையான) எந்த நோக்கத்திற்காகவும் அவரின் கூறினைப் பயன்படுத்துதலாகாது ;

(ஆ) புகையை அல்லது ஆவியை அல்லது துர்நாற்றங்களைத் தோற்றுவிக்கக் கூடியதான ஏதேனும் பதார்த்தத்தை அல்லது பொருட்கூறை எரிபொருளாகப் பயன்படுத்துதலாகாது ;

(இ) சொந்தக்காரரால் பேணப்படும் குப்பைவாளிகளில் அல்லது கட்டடத்தில் ஏற்பாடுசெய்து தரப்பட்டுள்ள குப்பைச்சட்டிகளில் தவிர, பொது அமிசங்களின்மேல் அல்லது அவற்றின் ஏதேனும் பாகத்தின்மேல் ஏதேனும் விவரணத்தினதான ஏதேனும் குப்பையினை அல்லது கழிவை வீசுதல் அல்லது விழ அனுமதித்தல் ஆகாது ; அல்லது

(ஈ) வேறு எவரேனும் சொந்தக்காரருக்கு சினமூட்டக்கூடியதான ஏதேனும் விலங்கினை அவரது கூறில் அல்லது பொது அமிசங்களில் வைத்திருத்தலாகாது.